Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

| ஈழநாடு சந்தா விபரம் | | |
|---|---|---|
| இந்தியா — இலங்கை | | |
| | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
| 1 வருடம் | 48-00 | 3 00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 13-00 | 3-25 |

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற்பெட்டி எண்: 49

மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி சித்திரை 29 ஆம் நாள் துல்ஹஜ் 28 (11-5-64 திங்கட்கிழமை இதழ் 90

# கூட்டரசாங்கம் நிறுவ சமசமாஜக்கட்சி முடிவு

## கூட்டாட்சியில் சமசமாஜி மட்டும் சேரும் என்.எம்.தீர்மானம் தோல்வி

### மூன்று கட்சிகளுக்கும் இடமவிக்க மத்திய கமிட்டி முடிவு

கொழும்பு, ஞாயிறு

இன்று காலை கூடிய லங்கா சமசமாஜக் கட்சியின் மத்திய கமிட்டிக்கூட்டத்தில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இடதுசாரி ஐக்கிய முன்னணி கூட்டுச் சேர்ந்து ஒரு கூட்டாட்சியை நிறுவுவதென்று முடிவு செய்யப்பட்டது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் முதலில் லங்கா சமசமாஜக் கட்சி மட்டும் சேர்ந்து கூட்டரசாங்கத்தை அமைக்க வேண்டுமென்று டாக்டர்என்.எம். பெரேரா கொண்டுவந்த தீர்மானம் கமிட்டிக் கூட்டத்தில் தோல்வியடைந்தது.

உத்தேச கூட்டரசாங்கத்தை நிறுவும் பட்சத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இடதுசாரி ஐக்கிய முன்னணியிலுள்ள மூன்று கட்சிகளும் இணையவேண்டுமென்றும் கூட்டாட்சியில் ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியுடன் இடதுசாரி ஐக்கிய முன்னணியிலுள்ள மூன்று கட்சிகளும் அங்கம் வகிக்க வேண்டுமென்றும் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா கொண்டுவந்த தீர்மானமென்று பதினேழு அதிகப்படியான வாக்குகளால் வெற்றிபெற்றது.

அரசியலில் இப்பொழுது எழுந்துள்ள புதிய பிரச்னைகள் பற்றி இடதுசாரி ஐக்கியமுன்னணித் தலைவர்கள் நேற்றும் இன்றும் கூடி பூர்வாங்க பேச்சுக்களை நடத்தினர். நேற்றிரவு நடைபெற்ற ஒரு மகாநாட்டில், டாக்டர் என். எம். பெரேரா, பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுடன் நடத்திய பேச்சுக்கள் குறித்து விளக்கமாகக் கூறினரென நம்பகமான வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது. உத்தேச கூட்டரசாங்க மந்திரி சபையில் லங்கா சமசமாஜக் கட்சி அங்கம் வகிப்பதையே தற்போதைய அரசாங்கத்தின் மந்திரிகள் பலர் விரும்புகிறார்கள். ஆனால் கூட்டரசாங்கத்தை இடதுசாரி ஐக்கியமுன்னணியிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சி ஆதரிக்கிறதென்று அறிவிக்கப்பட்டுள்ளது. கூட்டரசாங்கத்தில் கம்யூனிஸ்டுகள் மந்திரியாவதை தற்போதைய மந்திரிகள் பலர் வெறுக்கின்றனர்.

கூட்டரசாங்கத்தை ஆதரிப்பதா இல்லையா என்பது குறித்து இறுதியாகத் தீர்மானிக்கும்பொருட்டு இன்று காலை லங்கா சமசமாஜக் கட்சியின் மத்திய கமிட்டிக் கூட்டமொன்று நடைபெற்றது.

(6-ம் பக்கம் பார்க்க)

லண்டனில்

## நாடற்றவர் பிரச்னைபற்றி நேரு-சிறிமா பேசுவர்?

### இந்திய-பாகிஸ்தான் பிரச்னை பற்றியும் பேச்சுநடக்கும்

லண்டன், மே 10

அடுத்த ஜூலை மாதம் லண்டனில் நடைபெறவிருக்கும் காமன்வெல்த் பிரதமமந்திரிகள் மகாநாட்டுக்காக இலங்கை, இந்தியப் பிரதமர்கள் லண்டன் செல்லும்போது சந்தாப்பம் கிடைத்தால் அங்கு நாடற்றவர் பிரச்னைபற்றி பேச்சு நடத்தக்கூடும் என நம்பப்படுகிறது.

பிரதமர் நேரு இலங்கைப் பிரதமர் ஸ்ரீமதி பண்டாரநாயக்காவுடன் நாடற்றவர் பிரச்னை பற்றி பேசக்கூடும் என்பது ஒருபுறமிருக்க, இந்திய-பாகிஸ்தான் பிரச்னைபற்றியும் அவர் ஜனுதிபதி அயூப்கானுடன் பேசுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனல் இந்த விஷயங்கள் அனைத்தும் மகாநாட்டுடன் சம்பந்தப்பட்டதல்ல. மாநாட்டுக்கு வெளியே நடைபெறவிருக்கும் இப்பேச்சுக்களுக்கான சந்தர்ப்பம் சொற்பமாகவே இருக்கலாம் எனவும் எனவே இவை ஒரு பூர்வாங்கமாகவே இருக்குமென்றும் விஷயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன,

ஸ்ரீமதி பண்டாரநாயகாவின் டில்லி வருகையை இந்தியா எதிர்பார்த்ததென்றும், ஆனல் அது சாத்தியமில்லாதுபோய் விட்ட நிலையில், லண்டனில் கிடைக்கும் சிறிய சந்தர்ப்பம் இப்பிரச்னைக்குத் தீர்வு ஏற்படுத்தும் என நம்ப முடியவில்லையெனவும் கூறப்படுகிறது.

ஜனுதிபதிஅயூப்கான், ஸ்ரீமதி பண்டாரநாயகா ஆகியோருடன் பிரதமர் நேரு பொதுவாகவே பேசுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

சைகோனில்

## மக்னமாராவை கொல்லச் சதி!

சைகோன், மே 10

அமெரிக்கபாதுகாப்பு காரியதரிசி திரு. மக்னமாராவைக் கொலை செய்ய இங்கு மேற்கொள்ளப்பட்ட ஒரு சதியை தென்வியட்னும் பொலிசார் கண்டுபிடித்துள்ளனர். இச்சதியில் சம்பந்தப்பட்டவர்கள் பொலிசாரினுல் கைது செய்யபபட்டுள்ளனர். இச்சதியில், தென்வியட்னுமிலுள்ள அமெரிக்க தூதர் திரு. ஹென்றி கபேட் லொட்ஜையும் கொலை செய்ய திட்டமிடப்பட்டிருந்ததாம்.

அமெரிக்க பாதுகாப்பு காரியதரிசி திரு. மக்னமாரா எதிர்வரும் செவ்வாய்க்கிழமை தென்வியட்னுமுக்கு விஜயம் செய்யத் திட்டமிடப்பட்டிருந்தது. இந்த விஜயத்தின் போது அவர் நகருக்குள் காரில் வரும்பொழுது, அவ்வழியேயுள்ள ஒரு பாலத்துக்குக் கீழே வெடிகுண்டுகளை வெடிக்க வைப்பதன் மூலம் அவரைக் கொல்ல திட்டமிடப்பட்டிருந்தது. குறிப்பிட்ட அந்த பாலத்திற்குக் கீழே வெடிகுண்டு வைப்பதற்கான வேலையில் ஒருவன் ஈடுபட்டுக் கொண்டிருந்த சமத்தில் அவன் பொலிஸாரினுல் கைது செய்யப்பட்டான். இச்சதியில் சம்பந்தப்பட்டவர்கள் தங்களது குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளனர்.

கோடீஸ்வரன்

## வழக்கு தீர்ப்பினுல் திறைசேரிக்கு எழுந்துள்ளபிரச்னை

### சிங்களநிருபங்கள் திருப்பிஅனுப்பப் படுகின்றன

கொழும்பு, ஞாயிறு

சிங்களத்தில் தேர்ச்சிபெருத அரசாங்கசேவை ஊழியர்கள் தமக்கு சிங்களத்தில் அனுப்பப்படும் சுற்று நிருபங்களையும் பைல்களையும் அறிவித்தல்களையும் தமது இலாகா தலைவர்களுக்கு ஆங்கில விளக்கம் கோரி திருப்பி அனுப்புவதாக அறியப்படுகிறது.

அநேகமாக இவர்களுக்கு ஆங்கில மொழிபெயர்ப்புகள் இலாகா தலைவர்களிடமிருந்து கிடைப்பதாகத் தெரிகிறது.

சமீபத்திய, கோடீஸ்வரன் வழக்குத் தீர்ப்புக்குப் பின்னர் எதை எப்படிச் செய்வது என் யாருக்கும் தெரியாத குழப்பநிலை திறைசேரியில் தோன்றியிருப்பதாகத் திறைசேரி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பு தேஸ்டன் கல்லூரியில் நேற்று நடைபெற்ற சிங்களத் தேர்வுப் பரீட்சைக்கு மிகச்சிலரே தோற்றியதாகவும் திறைசேரி வட்டாரங்கள் கூறியுள்ளன.

கோடீஸ்வரன் வழக்குத் தீர்ப்பு சம்பந்தமாக இனி என்ன நடவடிக்கை எடுக்கலாமென்பது பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கென நியமிக்கப்பட்ட விசேஷ கமிட்டி எந்தவித ஆலோசனையையும் தெரிவிக்க முடியாத நிலையிலிருப்பதாக அறியப்படுகிறது.

## கடத்தல் முயற்சியில் விமானக் கம்பெனி ஊழியர்

### ரூ. 1260 அபராதம் விதிக்கப்பட்டது

மாவிட்டபுரம், ஞாயிறு

வெளிநாட்டு ஏர்லைன்ஸ் விமானக் கம்பனியொன்றைச் சேர்ந்த உத்தியோகத்தர் ஒருவர், இந்திய கரன்ஸி நோட்டுகளை இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு சட்டவிரோதமாக எடுத்துக்செல்ல மேற்கொண்ட முயற்சி தோல்வியில் முடிந்தது. இந்த நபருக்கு காங்கேசன்துறை சுங்கப்பகுதி உபகலெக்டர் திரு கே. பி. சி. ரணசிங்கா 1260 ரூபா அபராதம் விதித்துள்ளார்.

காங்கேசன்துறை விமான நிலயத்திலிருந்து நேற்று இந்தியாவுக்குப் புறப்படவிருந்த விமானத்தில் செல்லவிருந்த குறிப்பிட்ட நபரை சோதனையிட்டபொழுது அவரிடம் 420 ரூபாய் பெறுமதியான இந்

(6-ம் பக்கம்பார்க்க)

### மணிவாக்கு

கவனவீனமாகவும் ஒழுங்கீறாகவும் வேலைசெய்பவர் பிறரை மட்டுமன்றி தன்னையும் ஏமாற்றிக்கொண்டு, தன்மனதைக் கீழ்விஷமிட்டுக் கொள்ளுகின்றார். செய்யும் வேலையில் இன்பம் காண்பவரே வாழ்க்கையில் வெற்றி பெறுபவர்.

— பிஷப்புல்டன்ஷீன்

ஈழநாடு
EELA NADU
EELA NADU National Tamil Dail, Post Box 49, Jaffna
Telegram. EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு சித்திரை மீ 29. (11-5-64)

## கூட்டு அரசாங்கமும் தமிழர் நிலையும்

கூட்டு அரசாங்கத்தை அமைப்பதற்காக முற்போக்கு சக்திகளின் ஒத்துழைப்பை நாட பிரதமருக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அமோகமான ஆதரவு அளித்துள்ளது. இந்த யோசனையை ஆதரித்து அக்கட்சியில் 213 பேர்களும் எதிர்த்து நான்கே பேர்களும் வாக்களித்துள்ளனர். இதிலிருந்து தம்கட்சியில் பிரதமர் ஸ்ரீமாவோவுக்கு உள்ள செல்வாக்கு வெளியாகிறது. உண்மையில் ஸ்ரீமாவோதான் அக்கட்சியின் முதுகெலும்பு. அவரது செல்வாக்கினால்தான் சென்ற பொதுத் தேர்தலில் அக்கட்சி அதிக ஸ்தானங்களைப் பெறமுடிந்தது. ஆகவே அவரது இந்த முக்கிய யோசனை அக்கட்சியில் நிறைவேறியதில் வியப்பில்லை.

மேற்குறித்த தீர்மானத்தினால் கூட்டு அரசாங்க அமைப்புக்கு இருந்த முதல் தடை நீங்கியது. அடுத்தபடியாக இடதுசாரி ஐக்கியமுன்னணி. அக்கட்சிகளின் நிர்வாகசபையின் தீர்மானம் இதை எழுதும்வரை கிடைக்கவில்லை. இருசாராரும் இப்பொழுது ஒத்துழைக்கத் தீர்மானிப்பதாயின் அதற்கு அவரவர்களின் கட்சி நலனே முக்கிய காரணமாக இருக்க வேண்டும் வரவுசெலவுத் திட்டத்தைத் தயாரிப்பதிலும் பார்லிமெண்ட் சபையிலும் இடதுசாரியினரின் ஒத்துழைப்பு மிக உதவியாக இருக்கும். ஐக்கியதேசியக்கட்சியினரின் செல்வாக்கு வளராமல் தடுக்கவும் கூடுமானவரை தங்கள் கொள்கைகளைப் புகுத்தவும் இச்சந்தர்ப்பத்தை இடதுசாரித் தலைவர்கள் பயன்படுத்த முற்படலாம்.

இம்முக்கிய அரசியல் மாறுதலைக் குறித்துத் தமிழ்த்தலைவர்கள் பொதுவாக எதுவும் கூறவில்லை. காரணமென்ன? கூட்டு அரசாங்கம் ஏற்படின் தமிழரின் நிலைமை இப்போதுள்ளதைவிட மோசமாகமுடியாது. மொழி விஷயத்திலும் சரி, மலைநாட்டுத் தமிழரின் பிரஜா உரிமை பற்றியும் சரி, இடதுசாரிகள் அதிகத் தாராளமனப்பான்மை கொண்டவர்கள். விசேஷ நன்மைகள் ஏற்படமுடியாமற்போயினும் இப்போதுள்ளதைவிட நிலைமை மேம்படலாமென்று அவர்கள் நம்பக்காரணமுண்டு. மொழிச் சட்டத்தை திருத்தாவிடினும், நிர்வாக முறையிலே தமிழ் அரசாங்க ஊழியரின் நியாயமான குறைகளை நீக்கவும், பிரதேச சபைகளை ஏற்படுத்தித் தமிழுக்கு அதிக இடமளிக்கவும், இடதுசாரிகள் தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தலாம். நாட்டில் வகுப்புவாதச் சக்திகள் குறையவும், மலைநாட்டுத் தமிழருக்கு மனித உரிமைகள் கிடைக்கவும் புதிய வாய்ப்புகள் ஏற்படக்கூடும். ஆகவே தான் தமிழ்ப் பிரதிநிதிகள் யாரும் கூட்டு அரசாங்க அமைப்பைப் பற்றி எவ்வித எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை.

ஆனால் கூட்டு அரசாங்கத்துக்கு ஐக்கிய தேசியக் கட்சியினதும், ஜாதிக விமுக்தி பெரமுனை முதலியவற்றினதும் எதிர்ப்பு ஏற்கனவே தோன்றிவிட்டது. பார்லிமெண்டுக்குள்ளும் வெளியிலும் இந்த எதிர்ப்பு அதிக தீவிரமாகக்கூடும். அப்போது தமிழ்ப் பிரதிநிதிகளின் ஆதரவை எதிர்க்கட்சிகள்மட்டுமன்றி, அரசாங்கக்கட்சியும் ஆவலுடன் எதிர்பார்க்கும். தமிழ்ப் பிரதிநிதிகள் மிகவும் ராஜதந்திரத்துடனும் தீர்க்கதரிசனத்துடனும் நடந்துகொள்ளவேண்டிய சமயமிது. தமிழ்மக்களின் குறைகளை நீக்குவதே அவர்கள் முதல் கடமை. கூடுமானவரை எல்லாச் சந்தர்ப்பத்தையும் இதற்காகப் பயன்படுத்துவதில் அவர்கள் முயற்சி இருக்குமாயின் அதுபற்றி யாரும் குறை கூறமுடியாது. கூட்டு அரசாங்கம் ஏற்படுமாயின் அதைத் தமிழ்ப் பிரதிநிதிகள் தங்கள் சமூக நன்மைக்காகப் புதிய நம்பிக்கையுடன் ஆதரிக்கலாமென்றே சொல்லப்படுகிறது.

கூட்டு அரசாங்கம்

# பிலிப், கெனமன் "அவுட்" நுணலும் தன்வாயால் கெட்டது

## ஜனப்பிரதிநிதிகள் சபைக்கு பிரதமர் ஸ்ரீமாவோ மாறுவார்!

### யு. என். பி., கே. எம். பி. தீவிர எதிர்ப்பு

(நமது அரசியல் நிருபர்)

கூட்டரசாங்கம் ஏற்படுமா? தேசிய அரசாங்கம் உருவாகுமா? பார்லிமெண்ட் கலைக்கப்பட்டுப் பொதுத் தேர்தல் வருமா? சர்வாதிகார ஆட்சிதான் வந்துவிடுமா? இந்த வதந்திகளுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுவிட்டது.

இடதுசாரி ஐக்கிய முன்னணியிலுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அடிப்படைக் கொள்கைகளை ஏற்றுக்கொள்ள விரும்பும் முற்போக்கு சக்திகளுடன் சேர்ந்து கூட்டு அரசாங்கம் அமைப்பதற்கு சுதந்திரக் கட்சியின் செயற்குழு அங்கீகாரமளித்துவிட்டது.

லங்கா சமசமாஜக் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய மூன்றும் சேர்ந்த இடதுசாரி ஐக்கிய முன்னணியினரைச் சேர்ந்து கூட்டரசாங்கம் அமைக்கப்படமாட்டாதென்பதும் இடதுசாரி முன்னணியைச் சேர்ந்த ஒரு சிலரைமட்டும் சேர்த்தே அமைக்கப்படுமென்பதும் செயற்குழு தீர்மானத்திலிருந்து தெளிவாகிறது. எம். ஈ. பி. தலைவர் திரு. பிலிப் குணவர்த்தன முன்னர் பண்டாரநாயக்கா மந்திரிசபையிலிருந்து வெளியேற்றப்பட்டவர். அவரோடு மந்திரிசபையிலிருந்து படுவது இயல்பு. இப்பொழுதும் மந்திரிகளாயிருக்கும் சிலர் 'அவரோடு' ஒத்துழைக்க முடியாதென்பதை பகிரங்கமாகவே தெரிவித்துள்ளனர். 'அவர்களைப் பிற்போக்குவாதிகள்' என்று பிலிப்பும் பகிரங்கமாகத் திட்டி வருகிறார். அவர்களிருவரையும் மந்திரிசபையிலிருந்து வெளியேற்றவேண்டுமென்றும் அதற்குப் பிரதமர் ஒப்புக்கொண்டதாகவும் மேதினக் கூட்டத்தில் பிலிப் கூறியிருந்தார். அதைப் பிரதமர் மறுத்தார். தனது மந்திரிசபையில் பிற்போக்குவாதிகள் இல்லையென்றும் பிரதமர் தெரிவித்திருந்தார். இவற்றிலிருந்து பிலிப குணவர்த்தன மந்திரி சபையில் சேரும் அல்லது சேர்க்கப்படும் வாய்ப்பு இல்லையென்பது தெளிவு. நுணலும் தன் வாயால் கெடும் என்பது வசனம். பிலிப்பும் தன் வாயாலேயே தம் நிலையைக் கெடுத்துக்கொண்டுள்ளார்.

∴ ∴ ∴

கம்யூனிஸ்ட்சித்தாந்தசர்ச்சையினால் ரஷ்யாவுக்கும் சீனாவுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள மோதல் காரணமாக கம்யூனிஸ்ட் கட்சியினரை மந்திரிசபையில் பிரதமர் சேர்க்கமாட்டார். அவர்களைச் சேர்த்துக்கொண்டால் சர்வதேச அரங்கில் இலங்கைக்கு புதிய சிக்கல் தோன்றலாம். எனவே லங்கா சமசமாஜக கட்சித் தலைவர்கள்மட்டும்தான் கூட்டு அரசாங்கத்தில் சேரும் வாய்ப்பு உண்டு. சமசமாஜக் கட்சியை மட்டும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்பதுதான சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த பலரினதும் விருப்பமுமாகும். கூட்டு மந்திரிசபையில் சமசமாஜக கட்சித் தலைவர்கள் சேர்ந்தாலும் "பிற்போக்கு வாதிகளை" தலைதூக்க விடாமல் செய்வதற்காக இடதுசாரி ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த இதர கட்சிகளும் அதை ஆதரிக்கும். எதிர்ப்பது, அரசியல் தற்கொலையாகலாம்.

∴ ∴ ∴

கூட்டு அரசாங்கம் ஏற்படுவதை முக்கிய எதிர்க்கட்சியாக விளங்கும் யு. என். பி. எனப்படும் ஐக்கிய தேசியக் கட்சி வன்மையாக எதிர்க்கும் என்பது நிச்சயம். எப்பொழுதுமே பொதுத் தேர்தலை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் யு. என். பி. கூட்டு அரசாங்கம் ஏற்பட்டால் இன்னும் ஒரு வருடத்திற்குள் பொதுதேர்தல் நடைபெறமாட்டாதென்பதுடன் போட்டி தவிர்ப்பு ஒப்பந்த மூலம் அதற்குப் பின்பும் ஆட்சிக்கு வந்துவிடலாமென்றும் தங்களுக்கு இனி ஆட்சிபுரியும் சந்தர்ப்பமே கிடைக்காமல் போகலாமென்றும் அவர்கள் கவலைப் படுவது இயல்பு. இனி மீண்டும் இந்தியர், மொழிப்பிரச்சினைகளைக் கிளப்பி பிரசாரம் செய்வதுடன் பௌத்தத்தைக் "காப்பாற்றவும்" ஜனநாயகத்தைப் பாதுகாக்கவும் தீவிர பிரசாரம் செய்யக்கூடும். டாக்டர் பெரேரா மந்திரிசபையில் சேர்வதால் "இந்தியர்களின் ஏஜண்டான" அவரை எதிர்த்து ராஜரத்தினவும் பிரசாரம் செய்வார்.

கூட்டு அரசாங்கத்தை எதிர்க்கும் இடதுசாரியினரும் அரசாங்கத்தை எதிர்க்கக் கூடும். அவர்கள் தனியாக ஒரு முன்னணி அமைக்கக்கூடும் என்றவதந்தியும் ஏற்கனவே நிலவுகிறது. அவர்களும் எதிர்ப் பிரசாரம் செல்யலாம்.

∴ ∴ ∴

கூட்டுஅரசாங்க அமைப்புத் தீர்மானத்தை சுதந்திக்கட்சி செயற்குழுக் கூட்டத்தில் எதிர்த்து வாக்களித்த நான்கு எம் பி.க்களும் இனி என்ன செய்வர்? கட்சியிலிருந்து விலகிவிடுவார்களா? எம். பி. பதவியை ராஜினமாச் செய்வார்களா? எதிர்க்கட்சிகள் ஒன்றில் சேர்வார்களா? அல்லது கட்சியில் பெரும்பான்மையோர் செய்த முடிவை ஏற்று ஒத்துழைபபார்களா? அவர்கள் முடிவு எப்படியாயினும் அது வெகுவாக நிலைமையை பாதிக்க முடியாது.

∴ ∴ ∴

கூட்டு அரசாங்கம் ஏற்படுமாயின் பிரதமமந்திரி ஸ்ரீமா ஜனப்பிரதிநிதிசபையில் அங்கம் வகிக்க முன்வரலாமென்று ஒரு செய்தி கூறுகிறது. இது உண்மையாயின் பெரிதும் வரவேற்கத்தக்கது.

இந்த அரசாங்கம் பதவிக்கு வந்தமுதல் பார்லிமெண்டில பிரதமர் நாற்காலி காலியாகவே உள்ளது. இது அச்சபைக்கே பெரிய அவமதிப்பு ஆகும். அதுமட்டுமன்றி பல முக்கிய விஷயங்களில் பிரதமரின் கருத்தைத் தெரிந்து கொள்ள முடியாமலிருக்கின்றது. அநேகமாக நியமன மூலமே அவர் மெம்பராகக் கூடும். அப்படியானலும் அவர் ஜனப்பிரதிநிதி சபையில் இருப்பின் அச்சபைக்கு புத்துயிர் ஏற்பட்டு அதன் நடவடிக்கைகளும் அதிக முக்கியம் பெறும்.

## சார்ஜன்ட் தாக்கப்பட்டார்

மாவிட்டபுரம், ஞாயிறு

காங்கேசன்துறை பொலிஸைச் சேர்ந்த சார்ஜன்ட் சின்னத்தம்பி என்பவர், நேற்று ஒரு காரை மறித்து சோதனையிட்டபொழுது அவர் கார்ச் சாரதியால் தாக்கப்பட்டார். இதன் விளைவாக அவருக்கு இரத்தக் காயம் ஏற்பட்டது. சந்தேகநபரான கார்ச்சாரதியைரவன் ஐயாத்துரையைப் பொலிஸார் தேடிவருகின்றனர்

## சனசமூக நிலைய புதிய நிர்வாகிகள்

வட்டுக்கோட்டை, திங்கள்

கலைவாணி சனசமூகநிலையத்தின் ஆண்டு நிறைவு விழாவும் புதிய நிர்வாகிகள் தெரிவும் சமீபத்தில் நடந்தேறியது.

பின்வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: நா இரத்தினசாமி, செயலாளர்: மு. பாலசுப்பிரமணியம், பொருளாளர்: நா. சண்முகவடிவேல், நிலையப் பொறுப்பாளர்: நா. பழனிவேல்.

4 அங்கத்தவரைக் கொண்ட முதியோர்சபை ஒன்றும், 9 அங்கத்தவரைக் கொண்ட செயற்குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## ஜயாறன் எழுதுவது

கதிர்காமத்துக்கு பிரதமர் ஸ்ரீமாவோ நாளை செல்லுகின்றார். புதன்கிழமை 'கிரிவிகாரை' என்ற புதுப்பிக்கப்பட்ட பௌத்த கோவிலுக்கு புதிய ஸ்தூபி வைக்கும் விழாவாம். அந்த ஸ்தூபியை யார் செய்கிறார் தெரியுமா? களுத்துறையிலுள்ள வேலாயுதம் என்ற தமிழர் தானும்! இயற்கையான இந்து-பௌத்த ஒற்றுமைக்கு இதுவும் ஓர் அத்தாட்சி.

* * *

கூட்டு அரசாங்க அமைப்பு காரணமாக பௌத்தந்துக்கு ஆபத்து வந்துவிட்டதாகச் சிலர் கூச்சல் எழுப்புகிறார்களல்லவா? அதற்குப் பதில் அளிக்கிறதுபோலுள்ளது இந்த ஸ்தூபி வைக்கும் விழா.

இடதுசாரிகளுடன் கூட்டு அரசாங்கம் அமைக்க முற்படலாமென்ற அதிகாரத்தை ஜனநாயக முறையிலே பிரதமர் ஸ்ரீமாவோ பெற்றுக்கொண்டு மும்முறை கதிர்காமம் வருகின்றார்.

அவர் மட்டுமல்ல. கூட்டு அரசாங்கத்திலே நிதியமைச்சராகக் கூடிய டாக்டர் என். எம்.மும் பௌர்ணமி தினங்களில் பௌத்த கோவில்களுக்குச் சென்று வழிபடுவதாயும், அவர் கதிர்காமத்துக்கும் செல்வதுண்டென்றும் ஓரன்பர் தெரிவிக்கிறார். என். எம். உட்பட இடதுசாரித் தலைவர்கள் கதிர்காமம் சென்று வழிபடுவதன்மூலம் சில அரசியல் வட்டாரங்கள் கிளப்பும் பீதியை வெற்றிகரமாக அடக்கலாம்.

* * *

கதிர்காமத்திலுள்ள முருகன் முதலாளியா தொழிலாளியா? முருகனிடம் தொழிலாளரே அதிகமாகச் செல்லுவதைப் பார்க்கின்றோம். ஆகவே தொழிலாளரின் தலைவர்களும் முருகனிடம் செல்லுவதில் தவறில்லையல்லவா?

தொழிலாளர் மட்டுமன்றி முதலாளிகளும் அங்கு செல்லுகிறார்கள்தான். தமிழர், சிங்களவர், ஏழை, பணக்காரர் எல்லாருக்குமே அருள்செய்யக் காத்திருக்கின்றார். எல்லாருக்கும் அவர் பொதுவாகையால், தமிழ்-சிங்களம், முதலாளி-தொழிலாளி முதலிய எல்லாப் பிரச்சினைகளையுமே அவர்மூலம் தீர்த்துக் கொள்ளமுடியாதா?

தமக்கு ஏதாவது மனக் கவலை ஏற்பட்டால், பிரதமர் உடன் கதிர்காமத்துக்குச் சென்று முறையிடுவாராம். புரட்சிச் சதி ஆபத்திலிருந்து தம்மைக் காத்ததும் அந்த முருகன்தானென்பது அவரது நம்பிக்கையாம். புதிதாக அமையவிருக்கும் கூட்டு அரசாங்கத்துக்கும் பலபல சோதனைகள் வந்துள்ளன. இதுவரை தம்மைக் காத்துவந்த தெய்வம் இனியும் காக்குமென்ற நம்பிக்கையுடன், தெய்வ வழிபாட்டிலே அவர் அதிகம் ஈடுபடுவதாயின் அவரது அரசியல் கவலைகளும் குறையக்கூடும்.

* * *

கதிர்காமகிரி விகாரை புதுப்பிக்கப்பட்டுவிட்டது. இனி அங்குள்ள முருகன் கோவிலும் புதிக்கப்படவேண்டும். பக்தர்கள் அங்கு அதிகம் வருவதால் வழிபட போதிய வசதி இல்லை. கருங்கல் திருப்பணி பெரிய அளவில் செய்ய வேண்டும். புத்த கயா நிர்வாகத்திலே பௌத்தர்களும் இந்துக்களும் பங்குபற்றுவது போல், இரு சமயத்தவருக்கும் பொதுவான கதிர்காம கோவில் நிர்வாகமும் இரு சமூகத்தவர்களிடமும் இருந்தால், இந்தத் திருப்பணி மிகச் சிறப்பாக நடந்து, அங்கு பக்தர்கள் வசதியாக இருந்து வழிபட முடியுமென்றும் ஓரன்பர் தெரிவிக்கின்

(6-ம் பக்கம் பார்க்க)

இந்தியாவில் உற்பத்திசெய்த

# ஒலியைவிட வேகமான சூபர் ஸானிக் விமானங்கள்

## விமானப்படையிடம் ஒப்படைப்பு

பங்களூர், மே 10

பங்களூர் ஹிந்துஸ்தான் விமானத் தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்ட ஒலியைவிட வேகமாகச் செல்லும் இரு எச். எல். 24 சூபர்ஸானிக ஜெட்போர் விமானங்கள் இந்திய விமானப்படையில் இன்று ஒப்படைக்கப்பட்டன.

1956-ம் ஆண்டு சூபர்ஸானிக் விமானத்தின் தயாரிப்பு வேலை ஆரம்பமாகியதென்றும் ஆசியாவிலேயே முதன்முதல் அநேகமாக இந்தியாதான் இதைத தயாரிக்க ஆரம்பித்ததென்றும் கூறப்படுகிறது. முதல்விமானம் 1961-ல் பறக்கவிடப்பட்டது. பின் பல அபிவிருத்திகள் கொண்ட புதிய விமானம் விமானப்படையில் சிறப்பிடம் பெறுவதற்காக ஒப்படைக்கப்பட்டது.

பயிற்சி ஜெட்விமானம் ஒன்றையும் பல இலேசுரக விமானங்களையும் இப்போது தயார் செய்துவருகிறார்கள். விரைவில் ஹெலிகோப்டர் உற்பத்தி பூர்த்தியாகும் என்றும் அறிவிக்கபபடுகிறது,

புதிய சூபர்ஸானிக் விமானத்தில் 50 சதவிகிதத்துக்கு மேற்பட்ட பொருட்கள் இந்தியாவிலேயே உற்பத்தி செய்யப்பட்டன என்றும் இவ்வாண்டுக்கடைசியில் அது 60 சதவிகிதம் ஆகுமென்றும் தொழிற்சாலையின் மானேஜிங் டைரக்டர் கூறினர்.

நாஸிக் தொழிற்சாலையில் "கிக்" விமானக்கூடுகள் உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

# "மலேஸியா மீது எதிர் நடவடிக்கையை கைவிடோம்"

சுகர்ணோ

## மற்ருேர் உச்சி மகாநாட்டுக்கு பிலிப்பைன்ஸ் யோசனே

மணிலா, மே 10

மலேஷிய பிரச்னேக்குத்தீர்வு காண பிலிப்பைன்ஸ், இந்தோனேஷியா, மலேஷியா நாடுகளின் மற்ருேர் உச்சித்தலைவர்களின் மகாநாடு ஒன்று நடைபெற வேண்டும் என பிலிப்பைன்ஸ் அதிபர் மகபகால் துங்குவுக்கு யோசனே கூறியிருக்கிருர் துங்கு இதுபற்றி ஆராய்ந்து வருவதாக அறிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் மலேஷியா மீது எதிர்நடவடிக்கையிலிறங்கும் நோக்கத்தை இந்தோனேஷியா கைவிடாது என ஜனதிபதி சுகர்ணே ஜாகர்த்தாவிலுள்ள அமெரிக்க ஸ்தானிகரிடம் அறிவித்திருக்கிருர்,

வெளிநாட்டு மந்திரி டாக்டர் சுபந்திரியோ நிருபர்களிடம் பேசுகையில், இந்தோனேஷியக் கொள்கை காரணமாக அமெரிக்காவுடன் நெருக்கடியானிலே இந்தோனேஷியாவுக்கு ஏற்படாது என் நம்புவதாய்க் கூறினர்.

## "பூமாவையே ஆதரிக்கிருேம்"

ஜோன்ஸன்

வாஷிங்டன், மே, 10

ஜெனிவா நடுநிலைமை ஒப்பந்தத்தை அமெரிக்கா உறுதியுடன் ஆதரிக்கிறது என்றும், இளவரசர் சுவர்ணபூமா அரசாங்கத்தையே அது தொடர்ந்து ஆதரித்து வரும் என்றும் ஜனதிபதி ஜோன்ஸன் லாவோஸ் மன்னருக்கு எழுதிய கடிதம் ஒன்றில் தெரிவித்திருக்கிருர்.

## ஜப்பான் வென்றது

மணிலா, மே 10

இங்கு நடைபெற்ற ஆசிய பிராந்திய ஜூனியர் டென்னிஸ் போட்டியில் ஜப்பான் மூன்று ஆட்டங்களிலும் இந்தியாவைத் தோற்கடித்தது.

# அகதிகள் புனரமைப்பு ஏற்பாடுகள் விபரம்

## ஒரிஸாவில் 30,000 பேர் குடியமர்த்தப்படுவார்கள்

புதுடில்லி, மே 10

கடந்த 6-ம் திகதிவரை கிழக்கு பாகிஸ்தானிலிருந்து 3,11,494 பேர் இந்தியாவுக்குக் குடிபெயர்ந்து வந்திருக்கின்றனர். இதில்சுமார் 45000 பேர் கிறிஸ்தவர் 11,000 பேர் பௌத்தர்கள். மிகுதிப் பேர் ஹிந்துக்கள்.

2000 அகதிகளே ஆந்திராவிலும் 1000 பேரை சென்னேயிலும் 1000 பேரை மைசூரிலும் குடியமர்த்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பிற ராஜ்யங்களில் குடியமர்த்தப்படுவோர் விபரம் வருமாறு:

மகாராஷ்டிரம் 10,000. மத்தியபிரதேசம 25,000. உத்தர பிரதேசம் 1000. ஒரிஸா 30,000 அஸ்ஸாம் 15,000. குஜராத 5000. நேபா 1000.

தவிர தண்டகாரண்யத்திட்டத்தின்கீழ் 10,000பேர் குடியமர்த்தப்படுவார்கள்.

சென்னே ராஜ்யத்தில் விவசாயக்கூட்டு நிலம் எளிதில் கிடைக்காதாகையால் இக்குடும்பங்கள் மலைத்தோட்டங்களிலும், தொழிற்சாலை ஜீவனங்களிலும் குடியமர்த்தப்படும்.

பெல்காம், வடகன்னட ஜில்லாக்களில் 1000 பேரைக் குடியமர்த்த மைசூர் ஒப்புக்கொண்டிருக்கிறது.

ஆந்திர அரசாங்கம் நாகார்ஜுனசாகர் அணே அருகில் ஒரு முகாமும் அதன் கால்வாய்களின் அருகில் ஒருமுகாமும், அலகாபாத் ஜில்லாவில் ஒருமுகாமும் ஏற்படுத்தியுள்ளது. நாகார்ஜுனசாகார் முகாம்களில் குடியமர்த்தப்படுபவர்கள் மண்வேலையிலும் கால்வாய்கள் தோண்டும் வேலையிலும் ஈடுபடுத்தப்படுவார்கள்.

## நல்லெண்ண தூதுகோஷ்டி

ரபாட், மே, 10

வெளிநாடுகளில் சுற்றுப் பிரயாணம் செய்துவரும் பாரத நல்லெண்ணத் தூதுகோஷ்டியை நேற்று மொரோக்கோ பிரதமர் வரவேற்ருர். திரு. சாதிக் அலி தலைமையிலுள்ள இத்தூதுகோஷ்டியுடன் பிரதமர் ஒருமணி நேரம் பேசினர்.

மற்ருேர் இந்திய நல்லெண்ணத் தூதுகோஷ்டி ஸிரியா தலைநகர் டமாஸ்கஸ் வந்துசேர்ந்தது.

## சென்னேக்கு காவேரித் திட்டம்

சென்னே, மே 10

சென்னே கார்ப்பரேஷனின் காவேரித் தண்ணீர் சப்ளேத் திட்டம் சம்பந்தப்பட்டவரை, அமெரிக்காவில் இம்மாதிரித் திட்டங்களுக்கு ஏற்படும் செலவை ஒப்பிட்டுப்பார்த்து, அதன் பின்பே அரசாங்கம் ஏற்குமென மேயர் கிருஷ்ணமூர்த்தி கூறினர்.

அரசாங்க ஆய்வுக்குழு ஒன்று விரைவில் அமெரிக்கா சென்று இவ்விதத் திட்டங்களே நேரில் ஆராய்ந்து அவற்றின் செலவைக் கண்டறியுமென்றும் மேயர் கூறினர்.

கார்ப்பரேஷன் திட்டத்துக்கு ரூ 17.5 கோடி செலவாகுமென மதிப்பிடபபடுகினறது. திட்டம் அதிக செலவில்லாததெனத் தெரியவருமானல் அரசாங்கம் இதையேற்கும். முதன்மந்திரியுடன் நடைபெற்ற இவ்விபரம் தெரியவந்ததென மேயர் கூறினர்.

## நாகர்களுடன் சமரச முயற்சி

ஷில்லாங், மே 10

அஸ்ஸாம் முதன் மந்திரி கொஹிமாவில் தமது ஒருவார சுற்றுப்பிரயாணத்தை முடித்துக்கொண்டுவிட்டார். கிளர்ச்சி நாகர்களுக்கும் அரசாங்கத்துக்குமிடையே சமரசம் ஏற்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டுவரும் முயற்சிகளில் அவர் ஈடுபட்டிருந்தார், வண. மைக்கேல்ஸ்காட் உட்பட பலர் முதல்வருடன் சென்றிருந்தனர்.

தென்ரொடீஷியா

## நேருவுக்கு பிரிட்டிஷ் பிரதமர் கடிதம்

புதுடில்லி, மே. 10

அடுத்து லண்டனில் நடைபெறவிருக்கும் காமன்வெல்த் பிரதமர்களின் மகாநாட்டுக்கு தென்ரொடீஷியாவை அழைப்பது குறித்து இந்தியாவின் கருத்தைக் கோரி, பிரிட்டிஷ் பிரதமர் சர்ஹியூம், பிரதமர் நேருவுக்கு கடிதம் எழுதியிருக்கிருர். விரைவில் இதற்கான பதில் அனுப்பப்படுமென அறிவிக்கப்படுகிறது. தென்ரொடீஷியாவை மகாநாட்டுக்கு அழைப்பதை இந்தியா ஆதரிக்காது என முன்பு திரு. நேரு அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## கோபாலன் ராஜினமா இல்லை

எர்ணகுளம், மே 10

லோகசபையில் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவராக உள்ள திரு. ஏ. கே. கோபாலன், சபாநாயகருக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் தாம் தலைவர் பதவியை ராஜினமாச்செய்யப் போவதில்லையெனக் கூறியிருக்கிருர்.

"கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தினர்களும் அனுதாபிகளுமாகச் சேர்ந்தே என்னேத் தலைவராகத் தேர்ந்தெடுத்தார்கள். நான் தலைவர் பதவியை ராஜினமாச்செய்ய வேண்டும் என அவர்கள் விரும்பினல் கட்சியிலுள்ள 32 அங்கத்தினர்களும், அனுதாபிகளுமாகச் சேர்ந்து சபாநாயகருக்கு அபமதிரி ஒரு கடிதம் எழுதவேண்டும்" என்றும் 'கோபாலன் தன் கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிருர்.

தலைமைப் பதவியை ராஜினமாச் செய்யவேண்டுமெனக் கோரி திரு. டாங்கே தனக்கு ஒரு கடிதம் எழுதியிருப்பது உண்மைதான் என்றும் திரு. கோபாலன் ஊர்ஜிதம் செய்தார். திரு. டாங்கேக்கும் அவர் இம்மாதிரி பதில் எழுதியிருக்கிருர்.

# குருஷ்சேவுக்கு 10 லட்சம் மக்கள் வரவேற்பு

## சர்வதேச பதற்றநிலை தணிந்திருப்பதாக கருத்து

கெய்ரோ, மே 10

ஐக்கிய அரபியக் குடியரசுக்கு விஜயம்செய்திருக்கும் சோவியத் பிரதமர் குருஷ்சேவுக்கு, ஜனதிபதி நாஸர் நேற்றிரவு ஒரு விருந்தளித்தார். அப்போது அவர் பேசுகையில், இரு நாடுகளும் பல துறைகளில் ஒத்துழைக்கின்றனவென்றும் விடுதலைபெறும் நாடுகளின் சுதந்திர இயக்கத்தை ஆதரிப்பதிலும் அந்நியத் தளங்களே அகற்றும் முயற்சியிலும் கூட்டாகச் செயல்படுகிறதென்றும் கூறினர்.

திரு. குருஷ்சேவ் மேலும் பேசுகையில், சர்வதேச பதற்றநிலை ஓரளவு தணிந்திருக்கிறதென்றும், அணுஆயுதங்களுக்கான மூலப்பொருள் உற்பத்தியைக் குறைக்க ரஷ்யா, அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகள் உடன்பட்டிருப்பது நெருக்கடியை மேலும் தளர்த்துவதற்கான ஒரு துவக்கம் என்றும் குறிப்பிட்டார்.

நேற்று அலெக்ஸாந்திரியா வந்து சேர்ந்த திரு. குருஷ்சேவுக்கு 10 லட்சம் மக்கள் மாபெரும் வரவேற்பளித்தார்கள். வெளிநாட்டுத் தலைவர் ஒருவருக்கு இவ்வளவு பெரிய வரவேற்பு இதுவரை அளிக்கப்படவில்லையென அறிவிக்கப்படுகிறது. மக்கள் நெருக்கமாக குருஷ்சேவை நெருங்காமல் தடுப்பதில் பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர்.

நைல் நதி திருப்பிவிடப்படுவதைக்காண நான் வந்திருக்கிறேன் எனத் திரு. குருஷ்சேவ் அப்போது கூறினர். எங்கள் மனதில் நீங்கள் அழியா இடம்பெற்றுவிட்டீர்களென ஜனதிபதி நாஸர் கூறி அவரை வரவேற்ருர். திரு குருஷ்சேவுக்கு எகிப்தின் மிக உயர்ந்த 'ஆர்டர் ஆப் நைல்' என்ற கௌரவ விருதை நாஸர் பின்பு வழங்கினர்.

# "4 கட்டங்களில் மதுவிலக்கை அமுலாக்க வேண்டும்"

## டேக்சந்த் கமிட்டி சிபார்சு

புதுடில்லி, மே 10

மதுபானம் அருந்துவது தற்போது கபிட்சத்தின் அறிகுறியாகவும், அந்தஸ்தின் சின்னமாகவும் கருதப்படுவதாகவும், அதனல் ஏற்படும் பாதக விளைவைக் குறைத்து மதிப்பிடுவதற்கில்லை என்றும் டேக்சந்த் கமிட்டி கருத்து தெரிவித்துள்ளது. எனவே மதுபானத்தை அதன் உயரிய அந்தஸ்திலிருந்து அகற்ற வேண்டும் என்றும் கமிட்டி கோரியிருக்கிறது. மதுவிலக்குத் திட்டத்தை 4 கட்டங்களில் அமுலாக்குமாறும் அது சிபார்சு செய்திருக்கிறது.

முதல் கட்டத்தில் உயர்ந்த விகிதாசார சாராயமுள்ள மதுபானங்கள் பருகுவதைத் தடுக்க வேண்டும். இரண்டாவது கட்டத்தில் மதுபானங்களில் 10 சதவிகிதம் சாராயம் இருக்கலாம். மூன்ரும் கட்டத்தில் 5 சத விகிதம் இருக்கலாம். இவ்வாறு குறைத்துக் கொண்டுவந்து 1975-76-ல் பூரண மதுவிலக்குத் திட்டத்தை அமுலாக்கலாம் என அது கூறியிருக்கிறது.

இந்த 4 கட்டங்களையும் காந்திஜி நூற்ருண்டு விழா பூர்த்தி தினமான 1970 ஜனவரிக்குள் முடியும் வகையில் அமைத்துக் கொள்ளுமாறு மதுபான பிரதேசங்களுக்கு அதுயோசனே கூறியிருக்கிறது.

உடனடியாக் மதுவிலக்கை தேசம் முழுதும் அமுலாக்கிவிடவேண்டும் என்ற கோரிக்கையை கமிட்டி ஏற்கவில்லை எனினும் கள்ளச் சாராயம் காய்ச்சுவது பரவலாக இருப்பதால் மதுவிலக்கை கைவிடுவதையும் அது விரும்பவில்லை.

1975-76-ல் பூரணமதுவிலக்கு அமுலாவதால் வருடம் ரூ. 80 கோடி நஷ்டமாகும், விற்பனைவரி மத்திய எக்சைஸ் தீர்வை ஆகியவற்றிலிருந்து கிடைக்கும் வருமானத்தின் மூலம் இதைப் படிப்படியாக சரிக்கட்டலாம்

# ஈரானில்எண்ணெய்க்கிணறுகளே இந்தியா வாங்கும

## மந்திரி அளகேசன் அறிவிப்பு

புதுடில்லி, மே, 10

நாட்டுக்கு வெளியே சொந்தமாக எண்ணேக் கிணறுகளே ஏற்படுத்திக்கொள்ள முடியுமென இந்தியா எதிர்பார்ப்பதாய் மந்திரி அளகேசன்ராஜ்ய சபையில் கூறினர்.

தனது கரையோரமாகச் சில எண்ணேச் சலுகைகளே அளிக்க ஈரான் அரசாங்கம் முன்வந்திருப்பதாயும், அவற்றை வாங்கிக்கொள்ள இந்தியா முயன்று வருவதாயும் அவர் கூறினர்.

ஈரானில் ஒரு எண்ணேக் கிணறு இருப்பது, இந்தியாவில் 10 கிணறுகள் இருப்பதற்குச் சமம் என்றும் அவர் கூறினர்.

"வருடம் ரூ. 50 கோடிக்கு எண்ணே இறக்குமதி செய்து வருகிருேம். இதை நிறுத்திக் கொள்ள வேண்டுமெனில், ஒன்று இங்கேயே எண்ணே உற்பத்தி செய்துகொள்ள வேண்டும். அல்லது வெளிநாடுகளில் நமக்கெனச் சொந்தமாக எண்ணேக் கிணறுகளே வைத்துக்கொள்ள வேண்டும்" என்றும் மந்திரி குறிப்பிட்டார்.

## விமான விபத்து: 47 பேர் பலி

லீமா, மே 10

புவனஸ் அயர்ஸிலிருந்து புறப்பட்ட அர்ஜண்டின விமானம் ஒன்று, பெருவில் நொருங்கி விழுந்ததால் 42 பிரயாணிகளும், 5 விமான ஓட்டிகளும் மாண்டதாக அறிவிக்கப்பட்டது.

## அகதிகள் நிரம்பி வழிகின்றனர்

புதுடில்லி, மே 10

அகதிகள் முகாம்களேப் பார்வையிடும் பொருட்டு மத்திய மந்திரி திரு. மகாவீர் தியாகி ராய்ப்பூர் வந்து சேர்ந்தார், மேற்கொண்டு அகதிகளே ஏற்கமுடியாத அளவுக்கு இவை நிரம்பி விட்டதாயும், தொடர்ந்து அகதிகள் வந்துகொண்டிருப்பதாயும் மேற்கு வங்க அரசாங்கம் அறிவித்துள்ளது.

# கலாசார ஸ்தாபனங்கள் செய்தசேவை என்ன?

## விசாரணைசெய்ய கமிஷன் நியமிக்க கோரிக்கை

கொழும்பு, ஞாயிறு

தம்பபன்னிக் கலைத்தானத் தலைவர் திரு. பிரேமகுமார எப்பித்தவல, அரசாங்க உதவி பெறுங் கலைநிறுவனங்களான இலங்கைவானொலி, இலக்கிய வெளியீட்டுச்சபை, சாகித்திய மண்டலம், கல்விப் பகுதியின் கலாச்சாரப்பகுதி, கலைமன்றம் ஆகியவை நாட்டுக்காற்றிய கலைப்பணி குறித்தாராய உடனடியாக ஒரு கமிஷனை நியமிக்கவேண்டும் எனக் கோரியுள்ளார்.

இதுபற்றி அவர் கருத்துத் தெரிவிக்கையில்:

அரசாங்க உதவி பெறுங் கலை நிறுவனங்களெல்லாம் கலை வளர்ச்சிக்காக உழைப்பதற்குப் பதில் கலைகள் க்ஷீரணமடையவேண்டுமென்பதற்காகவே உழைக்கின்றன. உதாரணமாக கண்டிய நடனக்கலை சாசாவுடன் இணைக்ககப்பட்டு அதன் கலைத்தூய்மை கெடுக்கப்பட்டுள்ளது.

கீழ்நாட்டு நடனக்கலைமாற்றாந்தாய் மனோபாவத்துடனேயே மதிக்கப்படுகிறது. மேனாட்டு உத்திமுறைகளையும் பாணிகளையும் புகுத்தி நமது பாரம்பரியமான நடன முறையை சிதைத்துப் புதுவழிகண்டவர்களையே இலங்கையின் கலைத்தூதுவர்களாகப் பிறநாடுகளுக்கு அனுப்பப்படுகிறது. ஆபாசமும் கீழ்த்தர உணர்ச்சிகளைத் தூண்டுவனவாகவும் அமைந்த இலக்கியங்களைப் படைத்தவர்களுக்கு மட்டில்லா மதிப்பும் பரிசும் வழங்கப்படுகிறது. இலங்கையினது கலாச்சாரத்துக்கும் பண்புக்கும் ஒவ்வாத புதிய இசை ஒன்றை இலங்கை வானொலி ஒலிபரப்புகிறது. இலங்கையில் தயாராகும் படங்கள் இலங்கையின் கலை உணர்வைப் பிரதிபலிப்பதில்லை என்பதுடன் குடும்பத்துடன் சென்று பார்க்கக் கூடாத ஆபாசக் களஞ்சியங்களுமாகும். புதிதாக நிர்மாணிக்கப்படும் கட்டடங்கள் இலங்கையின் சிற்பமுறைப்படி கட்டப்படுவதில்லை. அமெரிக்கச் சிற்ப முறையைப் பின்பற்றியே அவை அமைக்கப்படுகின்றன. தேசியத் தலைவர்களுக்காக நாட்டப்படுஞ் சிலைகளிற்கூட நமது நாட்டுக் கலை மணம் வீசுவதில்லை. மேனாட்டுச் சிற்பிகள் தயாரித்த இந்தச் சிலைகள் நமது தேசியத் தலைவர்களை ஞாபகப்படுத்துவதற்குப் பதிலாகக் குரங்குகளையே நமக்கு ஞாபகமூட்டுகின்றன. வெளிநாடுகளிலுள்ள நமது ஸ்தானிகர்கள் நமது சுதந்திரதினத்தைக் கொண்டாடும் போது தமது ஊழியர்கள் பைலா நடனமாடி கொண்டாடுவதை தெரிந்து கொண்டும் தாமே மேற்கத்திய நடன மோகத்தில் ஆழ்ந்து விடுகிறார்கள்.

நமது நாட்டுக் கலைகளின் பரிச்சயம் சிறிதுமற்ற மேனாட்டுப் பட்டதாரிகளின் தலைமையில் இயங்கி எமது கலைகளையும் கலாசாரத்தையும் அழித்து வரும் இந்த ஸ்தாபனங்களைக் கலைத்துவிட்டு அநுராதபுரம் பாதுகாப்புச் சபைபோன்ற சுதந்திர ஸ்தாபனம் ஒன்று நமது நாட்டுக்கலை உணர்வுள்ளவர்களின் தலைமையில் இயங்க வேண்டும்.

# "தோட்டங்கள் உடனடியாக தேசியமயமாகமாட்டா"

கொழும்பு, ஞாயிறு

கூட்டரசாங்கம் அமைக்கப்பட்டதும் அதிர்ச்சி தரும் நடவடிக்கைகள் எதுவும் உடனடியாக எடுக்கப்படமாட்டாதென என். எம். பெரேராவை ஆதரிக்கும் கோஷ்டியினர் கருத்துத் தெரிவித்துள்ளனர். டாக்டர் பெரேராவுடன் கலந்துரையாடியபின்னரே அவர்கள் இவ்வாறு கருத்துத் தெரிவித்தனர்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கம் உடனடியாகத் தேயிலைத் தோட்டங்களையும் வர்த்தக வங்கிகளையும் தேசியமயமாக்குவதை எதிர்ப்பதால் அதுபற்றித் திரு. பெரேரா வற்புறுத்தமாட்டார் என்றும் அதற்குப் பதிலாக வர்த்தக வங்கிகளைக் கட்டுப்படுத்தும் வகையில் சட்டங்களை அமைக்க முயல்வாரென்றும் இவர்கள் தெரிவித்தனர்.

டாக்டர் பெரேரா தனது கட்சியிலும் தொழிற்சங்கங்களிலுமுள்ள தனது ஆதரவாளர்களுக்குத் தான் அரசாங்கத்தில் இடம்பெற்றதும் அரசாங்கத்தின் முற்போக்கான திட்டங்களை எதிர்க்கும் மேலதிகாரிகளை எல்லாம் அகற்றித் தீவிரமான மாற்றங்களைச் செய்வாரெனத் தெரிவித்துள்ளாரெனவும் அறியப்படுகிறது.

தொழிலாளரது குறைந்தபட்ச 21 கோரிக்கைகள் பற்றி இப்போது தாம் அக்கறை செலுத்தமாட்டாரெனவும் தாம் பதவியிலமர்ந்த ஆறு மாதங்களின் பின்பே இது பற்றிக் கவனம் செலுத்துவாரென்றும் திரு. பெரேரா தெரிவித்தாராம்.

ஸ்ரீமாவோடு நுவரெலியாவிலும் கொழும்பிலும் நடத்திய பேச்சுவார்த்தைகளின் பயனாகத் தமது திட்டங்கள் அனைத்தையும் அரசாங்கம் வரவேற்கக்கூடிய சூழ்நிலை உருவாகிவருவதாகத் திரு. பெரேரா நம்பவசாகத் தெரிகிறது.

## தாதிமார் பற்றுக்குறை

### சத்திர சிகிச்சை தாமதம்

கொழும்பு, ஞாயிறு

கொழும்பு பெரியாஸ்பத்திரியில் தாதிமார் பற்றுக்குறையால் பல சத்திர சிகிச்சைகள் பின் போடப்பட்டுள்ளன. 2 மாதங்களுக்கு முன்னர் வெளியேற்றப்பட்ட கன்னியாஸ்திரிகளின் இடத்துக்கு இன்னமும் புதிய தாதிகள் நியமிக்கப்படவில்லையென்பது குறிப்பிடத்தகுந்தது. சத்திர சிகிச்சையின் போது கடமையாற்றுவதற்கு விசேஷ பயிற்சி பெற்ற திறமை மிக்க தாதியர் இல்லாவிடில் சத்திரசிகிச்சை குழப்பத்தில் முடியும் என சத்திரசிகிச்சை செய்யும் வைத்திய அதிகாரிகள் மேலிடத்திற்குத் தெரியப்படுத்தியுள்ளனர். 50 தொடக்கம் 60 வரையும் உள்ள படுக்கைகள் கொண்ட வார்ட் ஒன்றில் முன்பெல்லாம் ஒரு கன்னியாஸ்திரியின் மேற்பார்வையில் 3 தாதியரும் 2 மாணவ தாதியரும் கடமையாற்றுவதுண்டு. தாதியர் மட்டுமே இத்தகைய வார்ட்டுகளில் கடமையாற்ற வேண்டுமென்றும் கன்னியாஸ்திரிகளின் இடத்தை நிரப்புவதற்குப் பல வருடஅநுபவம் வாய்ந்த தாதியரே அனுமதிக்கப்பட வேண்டுமென்றும் மேலிடத்துக்குச் சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

வெளிநோயாளர் பகுதியிலுள்ள தாதியர் விடுமுறையிற் செல்லும்போது பதிலாகக் கடமையாற்றவே தாதியர் இல்லையென்றும் இந்த நிலை தீவின் பல பாகங்களிலும் உள்ள ஆஸ்பத்திரிகளில் நிலவுவதாகவும் கூறப்படுகிறது.

## செய்திச்சுருக்கம்

தொழில் சமுகசேவைமந்திரி திரு. டி. எஸ். குணசேகரா ரயிலில் பிரயாணம் செய்துகொண்டிருந்தபோது பணம் கொடுத்து பெறப்பட்ட டிக்கட்டோ அல்லது பார்லிமெண்ட் அங்கத்தவர்களுக்குரிய ரயில்வே பாஸோ வைத்திருக்காத காரணத்தினால் ரூ. 19-10 அபராதம் செலுத்த வேண்டி நேர்ந்தது.

●

போதிய நிதி இல்லாத காரணத்தினால் பல பரீட்சைகளை நிறுத்திவைக்கவேண்டிய நிர்ப்பந்தமேற்படும் என பரீட்சைக் கமிஷனர் திரு. எச். எல். விமலசூரியா திறைசேரிக்கு அறிவித்துள்ளார்.

●

முட்டை, கோழிக்குஞ்சுகள், காய்கறிகள் ஆகியவற்றின் விலையைக் குறைக்க உணவு விவசாய கூட்டுறவு அமைச்சு தீர்மானித்துள்ளது. வாழ்க்கைச் செலவைக் குறைக்கும் நோக்கமாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

●

ஆப்பிள் பயிரிடுவதற்குப் பொருத்தமான இடங்களில் ஆப்பிளைப் பயிரிட அரசாங்கம் தீர்மானித்துள்ளது. ராகலையிலுள்ள அரசாங்கப்பண்ணையில் பரீட்சார்த்தமாகப் பயிரிடப்பட்ட ஆப்பிள் நல்ல வெற்றியை அளித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

●

சிறு அளவில் கைத்தொழில் நடத்துபவர்களும் பெரிய முதலில் கைத்தொழில் செய்பவர்களும் தமது தொழிலை நடத்துவதற்குத் தேவையான மூலப்பொருள்களை இறக்குமதிசெய்வதற்கு அனுமதியளிக்கப்படவிருக்கிறார்கள். இதற்கான நடவடிக்கைகளை வர்த்தக கைத்தொழில் அமைச்சு மேற்கொண்டுள்ளது.

●

இந்தவருடம் பாடசாலைகளைத் திருத்துவதற்கு ஒதுக்கப்பட்ட பணம் போதாததால் நிதிவருடத்தின் அரைவாசிக் கால எல்லைக்குள்ளாகவே ஒதுக்கப்பட்ட பணமெல்லாம் தீர்ந்துவிட்டதாக கல்வி இலாகா அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்த வருடத்தில் கொழும்புப் பகுதியிலுள்ள பாடசாலைகளில் அரைவாசிப் பாடசாலைகளுக்குக்கூடத் திருத்துவதற்கான பணம் கொடுக்கப்படவில்லையெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

●

கிராம விஸ்தரிப்புத் திட்டத்தில் சில வருடங்களுக்கு முன் கட்டப்பட்டவீடுகள் தற்போது இடிந்துவிழும் அபாயகரமான நிலையிலிருப்பதாக சித்தாண்டிக்குடி கிராம அபிவிருத்தி சபைக் காரியதரிசி மட்டக்களப்பு அரசாங்க அதிபருக்குப் புகார் செய்துள்ளார்.

●

கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தில் கொடுக்கப்பட்ட 'ஜம்பிங்பிஷ்' என்ற ரகத்துணி தண்ணீரில் போட்டதும் சுருக்கம் காண்பதாக பண்டாரவளையில் இத்துணியை வாங்கியவர்கள் புகார் செய்துள்ளார்கள்.

●

ரயில்வே நிற ஒளி சமிக்ஞை கொழும்பில் தடைப்பட்டது. தொடர்புபடுத்தும் வயர்களை திருடர்கள் சிலர் திருடிச் சென்றுவிட்டதாலேயே இவ்விதம் நேர்ந்தது.

●

ரூ. 130-15 பெறுமதியான 'சிறிலங்கா' பத்திரிகைகள் இலங்கை வானொலி நிலையத்திலிருந்து திருடப்பட்டது சம்பந்தமாக கொள்ளுப்பிட்டியைச் சேர்ந்த கே. ஏ. புஷ்பராஜா, ஏ. பாலச்சந்திரன் ஆகிய இருவரும் கொழும்பு மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டபோது இருவரும் தலா ரூ. 250 பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்கள்.

# செனட்டரின் மைத்துனர் கொலையுண்டதன் காரணம்

## கல்கிசையில் பொலிஸ்வேட்டை

கொழும்பு, ஞாயிறு

செனட் தலைவர் திரு தோமஸ் அமரசூரியாவின் மைத்துனர் திரு. கிரேட் பெர்னாண்டோவின் கொலை பற்றிய விசாரணை தெஹிவளை-கல்கிசையில் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

அம்பலாங்கொடையில் வெந்தகை நதி கலக்குமிடத்தில் நெஞ்சில் கத்திக்குத்து காயங்களுடன் அவரது உடல் கிடந்தது. ஆனால் தெஹிவளை-கல்கிசைப் பகுதிகளில் அவர் கொலைசெய்யப்பட்டார் என்றும், மத்துகமவுக்கருகில் ஆற்றில் அவரது உடல் ஆழ்த்தப்பட்டதென்றும் பொலிசார் நம்புகின்றனர்.

கல்கிசை பொலிசார் அம்பலாங்கொடை பொலிசாரிடமிருந்து விசாரணைகளைத் தற்காலிகமாக ஏற்றிருக்கின்றனர்.

திரு. பெர்னாண்டோவுக்கு பணக்கஷ்டம் ஏற்பட்டிருந்ததாகக் காணும் ஒரு முக்கிய கடிதம் காணப்பட்டதென்றும் கூறப்படுகிறது. கடன் தொல்லையால் அவர் பிடிக்கப்பட்டிருந்ததாகவும் பொலிஸார் கருதுகின்றனர். திரு. பெர்னாண்டோவுக்குப் பணம் தேவையாய் இருந்தது என இதுவரை நடைபெற்ற விசாரணைகளிலிருந்து தெரிகிறது.

மே 1-ம் திகதி இரவு அவரைக் கண்டவர்கள் எவரும் இருப்பின் தம்முடன் தொடர்பு கொள்ளும்படி மீண்டும் பொலிஸார் விண்ணப்பித்திருக்கின்றனர். அன்றைய தினம் மாலை 5-15-க்கு திரு. பெர்னாண்டோ பிரியந் தலையில் கடைசியாகக் காணப்பட்டதாகக் கூறப்படுகிறது.

## மொரார்ஜி

புதுடில்லி, மே 10

காஷ்மீர் பற்றிய இந்தியாவின் கொள்கையில் மாற்றம் இருக்க முடியாது என டில்லியில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் முன்னாள் நிதி மந்திரி திரு. மொரார்ஜி தேசாய் கூறினார். காஷ்மீருக்காக இந்திய வீரர்கள் உயிர்த் தியாகம் செய்தது வீணாக முடியாதென்றும் அவர் கூறினார்.

## "தர்க்க ரீதியாக விளக்க வேண்டும்"

சுழிபுரம், ஞாயிறு

சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி மண்டபத்தில் திரு. இ. பொன்னுத்துரை தலைமையில் நாவுக்கரசர் விழா கொண்டாடப்பட்டது. சிறப்புச் சொற்பொழிவாளராக, கலந்து கொண்ட திரு. மு. சிவானந்தம் பேசுகையில்; தொண்டாற்றி வாழ்வதே எமது குறிக்கோளாயிருக்க வேண்டு மென்பதை நாவுக்கரசர் வரலாறு வலியுறுத்துகிறது என்றும், உழவாரப்பணி புரிந்து உயர்ந்த அவர் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்றநான்கு மார்க்கங்களில் கிரியை வழி நின்று ஆண்டவனுக்கு அடிமை போல வாழ்ந்து, பிறவிப்பிணி தீர்த்தவர் என்றும் கூறினர்.

"சமயத்திலே வளர்ச்சிகாண வேண்டுமாயின் இளைஞர் உள்ளத்திலே தெளிவு ஏற்பட வேண்டும். ஏராளமானபுராண இதிகாசக் கதைகளை மனம் போனவாறெல்லாம் மாணவர்களுக்கு போதிப்பதால், விஞ்ஞானம் படிக்கும் மாணவர்களுக்கு ஐய உணர்வு ஏற்படுகின்றது. தத்துவங்களையும் சித்தாந்தக் கொள்கைகளையும் தர்க்க ரீதியாக விளக்க வேண்டும்" என்று அவர் கூறினர்.

## சிங்களப் பரீட்சைக்கு 40,000பேர்தோற்றினர்

கொழும்பு, சனி

இன்றும், இம்மாதம் 16-ந் திகதி சனிக்கிழமையும் நடைபெறவிருக்கும் சிங்களத் தகுதிப் பரீட்சைக்கு 40,000 க்கு அதிகமான அரசாங்க ஊழியர்கள் தோற்றுவர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்றும் எதிர்வரும் சனிக்கிழமையும் நடைபெறும் சிங்கள தேர்வுப் பரீட்சை காரணமாக தபால், தந்தி, டெலிபோன் சேவைகளில் தாமதமெடுக்கலாம் என்று தபாற் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

ஜி ஜி. யின்

# உருவச்சிலை கிடைத்தபின்பே இடம்பற்றி தீர்மானிக்கப்படும்

## யாழ். மாநகரசபைக் கூட்டத்தில் முடிவு

யாழ்ப்பாணம், ஞாயிறு

நூல் நிலையக் குழுவின் சிபார்சு பற்றி, நேற்று முன்தினம் துணைமேயர் திரு. ஜே. எஸ். அழகையா தலைமையில் நடைபெற்ற யாழ்ப்பாணம் மாநகரசபை கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டபோது, திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் உருவச்சிலை கிடைத்தபின்பே, எவ்விடத்தில் அச் சிலையை நாட்டுவதென முடிவுசெய்யவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

திரு. க. வீ. தெய்வேந்திரனால் கொண்டுவரப்பட்ட கீழ்வரும் பிரேரணையை நிதிக்குழுவிற்கு விடுவதென கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. ஞாயிற்றுக்கிழமைகளிலும், பொதுவிடுமுறை நாட்களிலும் சுகாதார பரிசோதகர்கள், ஓவசியர்கள், மேற்பார்வையாளர்கள் வேலைசெய்யாத காரணத்தால் சந்தைகளில் வேலைசெய்யும் வடிகால் தொழிலாளர்கள், நகரசுத்தி மலகூடத்தொழிலாளர்கள் தங்கள் வேலைகளைச் செய்கின்றார்கள் இல்லை. எனவே இவர்கட்கு ஒரு சிறு படியை வழங்கி பொதுவிடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் இவர்களை வேலைசெய்யும்படி பணிக்கவேண்டும்.

திரு. பி. எப். சேவியரால் கொண்டுவரப்பட்ட கீழ்வரும் பிரேரணையையும் நீதிக்குழுவிற்கு விடுவதென தீர்மானிக்கப்பட்டது.

தொழில்புரியும் காலத்தில் இறந்துபோன மலசலகூட்டுத் தொழிலாளர்கள் குடும்பங்களுக்கு பென்சன் அல்லது உதவிப்பணம் வழங்கப்பட வேண்டும்.

திரு. ஆ. துரைசிங்கத்தினால் கொண்டுவரப்பட்ட பிரேரணையை மராமத்து குழுவிற்கு விடுவதென தீர்மானிக்கப்பட்டது.

வெள்ள வாய்க்கால் வீதிக்கு திருத்தங்கள் புரிந்து விஸ்தரித்து அதனை அரசடி வீதியுடன் இணைப்பதற்கு ஒரு சிறு துண்டு நிலம் தடையாக இருப்பதால் பூரணத்துவம் பெறாது அவ் வீதியை அரசடி வீதியுடன் இணைக்க திருத்த வேலைகளை மேற்கொள்ள வசதிசெய்யும் பொருட்டு குறித்த அக் காணியை கட்டாயத்கொள்வனவு செய்வது.

## தங்கத்தை கடத்த முயற்சி

### ரூ. 9000 அபராதம்

கொழும்பு, சனி

தனது சிற்றுண்டி பாத்திரத்துக்குள்வைத்து பத்தோன் பதரை தோலா தங்கத்தை இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு கடத்த முயன்ற ஒருவரின் செயலை தலைமன்னார் சுங்கப்பகுதியினர் முறியடித்துள்ளனர். கொழும்பிலுள்ள இந்திய வர்த்தகர் ஒருவரே இம் முயற்சியில் ஈடுபட்டிருந்தார். விசாரணைகளுக்குப் பின்னர் தங்கம் பறிமுதல் செய்யப்பட்டு தலைமன்னார் சுங்கப்பகுதி உப கலெக்டர், வர்த்தகருக்கு ரூ. 9000 அபராதம் விதித்தார்.

உடுப்புகளுக்குள் வைத்து இரு சவரின் மதிப்புள்ள தங்கத்தை இந்தியாவுக்கு கடத்த முயன்ற மற்றுமொரு வர்த்தகருக்கு சுங்கப்பகுதியினர் ரூ. 900 அபராதம் விதித்துள்ளனர்.

## தேசீய விளையாட்டு விழா

சுழிபுரம், ஞாயிறு

தேசிய விளையாட்டுகளுக்கு ஊக்கமூட்டுமுகமாக யாழ்ப்பாண மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாசம் அடுத்த மாத முற்பகுதியில் மாபெரும் தேசிய விளையாட்டு விழாவொன்றை நடாத்தவிருக்கிறது. இவ்விழாவில் 15 மைல் மரதன் ஓட்டப் போட்டி, மாட்டு வண்டிப் போட்டி, நீச்சல் போட்டி, இயந்திரப் படகுப் போட்டி, கட்டுமரப் போட்டி, காவடி நடனப் போட்டி ஆதியன நடைபெறவிருக்கின்றன. இதற்கான ஏற்பாடுகளைக் கவனிப்பதற்கு சமாசத் தலைவர் கேட்முதலியார் சி. தியாகராசாவைத் தலைவராகக்கொண்ட உபகுழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. நீச்சல் போட்டி, படகோட்டப் போட்டி, கட்டுமரப் போட்டி, காவடியாட்டப் போட்டி என்பன கீரிமலையிலும் மரதன் போட்டி, மாட்டு வண்டிப் போட்டி என்பன யாழ்ப்பாணத்திலும் நடைபெறவிருக்கின்றன.

## சம்பந்தர் கலைமன்ற நிர்வாகிகள்

பருத்தித்துறை, ஞாயிறு

புலோலி கிழக்கு ஞானசம்பந்தர் கலைமன்ற இரண்டாவது ஆண்டு நிறைவு விழாவை அடுத்து நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர்: திரு மூ. கணேசன். உப தலைவர்: திரு. க. இராசசிங்கம். காரியதரிசி: செல்வி கு. சூரியகுமாரி. உப காரியதரிசி: செல்வி கு. சந்திரவதனா. தனாதிகாரி: க. புவனராணி. நிலைய அதிகாரி: செல்வி இ. சீதாதேவி. கணக்காளர்: திரு. மூ. மகேஸ்வரம். தையல்நிலைய முகாமையாளர்: திரு. சு. விஜசித்தம்பி.

## "மோட்டோர் மான்"

கொழும்பு, சனி

"மோட்டோர் மான்" என்ற ஆங்கில மாத இதழ் ஒன்று அடுத்த மாதத்திலிருந்து வெளியிடுவதற்கான முயற்சிகளையும் - நடவடிக்கைகளையும் தாம் எடுத்து வருவதாக அதன் ஆசிரியர் திரு. என். கனகசூரியர் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

காணி அதிகாரியின் காரியாலயத்தில் - வாகனப் பகுதிக்கு அதிகாரியாய் இருக்கும் திரு என். கனகசூரியர் இந்த ஆங்கில மாத இதழை பிரசுரிப்பதற்கான அனுமதியை அரசாங்கத்திடமிருந்தும் பெற்றுக் கொண்டதாகவும் தெரிவித்தார். போக்கு வரத்துப் பற்றிய கட்டுரைகளும் தற்போதைய போக்கு வரத்தை சீர்திருத்துவதுபற்றிய ஆலோசனைகளும் "மோட்டோர் மானில்" இடம் பெறும் என்றும் தெரிய வருகின்றது.

## 30 பிரிட்டிஷ் வீரர் பலி

ஏடன், மே 10

ஏமனில் நடைபெற்ற ஒரு கடும் சண்டையில் 30 பிரிட்டிஷ் வீரர்கள் கொல்லப்பட்டனர் என்றும், 20 பேருக்கு மேல் காயமடைந்தனர் என்றும் அ விக்கப்படுகிறது.

## வானொலிநிகழ்ச்சிகள்

### திங்கள் 11-5-64

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 பாமாலை, 6-55 கிறிஸ்தவ நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்ரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நிலைய ஒலிப்பதிவுகள், 5-45 திரை இசை.

இரவு 6-15 கிராம சஞ்சிகை, 6-45 வீணை—மகேஸ்வரி அப்பாத்துரை, 7-15 ஏ. எஸ். நாராயணன்—பாட்டு, 8-00 இஸ்லாமிய நிகழ்ச்சி, 9-30 தமிழ் மூலம் சிங்களம், 10-00 நேயர் விருப்பம்.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15) பகல் 2-00, இரவு 7-15,

காலை 6-30 மங்கள இசை, 6-50 வாத்திய இசை, 6-55 அருள் வாக்கு, 7-00 துதிப் பாடல்கள், 7-30 கடலூர் வி. ராமமூர்த்தி—பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 ஆர். சுந்தரி—பாட்டு, 1-30 வாத்திய இசை, 1-50 கதம்பம், 2-10 கடலூர் வி. ராமமூர்த்தி—பாட்டு, 2-40 பொன்னொளிர் பாரதம்—தொடர்நிகழ்ச்சி.

மாலை 5-15 திரைப்பட இசை, 5-45 இசைப் பயிற்சி.

இரவு 6-20 கிராம நிகழ்ச்சிகள், 7-30 ஆகாஷ்வாணி ஒலிப்பதிவுகள், 7-40 ஆர். சுந்தரி—வீணை, 8-30 டெல்லி அஞ்சல், 8-40 தேசபக்திப் பாடல்கள், 9-15 வெற்றி வாகை—தொடர் நிகழ்ச்சி, 9-30 இசைக் கோவை.

## வருடாந்த விளையாட்டுப் போட்டி

பருத்தித்துறை, ஞாயிறு

உடுப்பிட்டித் தொகுதித் தமிழ்ப் பாடசாலைகளின் வருடாந்த விளையாட்டுப் போட்டிகளை தொகுதிப்பாடசாலைகளின் தலைமை ஆசிரியர் சங்கத்தால் தெரிவு செய்யப்பட்ட உபசபையினர் ஜூன் மாத முதல் வாரத்தில் நடாத்துவதென முடிவு செய்துள்ளனர் எனத் தெரியவருகிறது.

## கோகலே ஜயந்தி

புதுடில்லி, மே 10

கோபாலகிருஷ்ண கோகலேயின் 98-வது பிறந்த தினம் நேற்று இந்தியாவில் கொண்டாடப்பட்டது.



## டிட்டோ போலந்து செல்வார்

பெல்கிரேட், மே 10

யூகோஸ்லேவிய ஜனாதிபதி டிட்டோ அடுத்த மாத முதலில் போலந்துக்கு விஜயம் செய்யவிருக்கிறார்.


நிறுத்துங்கள்!




தரம் குறைந்த மைகளினால் உங்கள் பேனாவை துஷ்பிரயோகம் செய்வதை நிறுத்துங்கள்- பார்க்கர் சுப்பர் குயிங்கை பாவியுங்கள். இதில் பேனாவைப் பாதுகாக்கும் சொல்வ் X உண்டு. சுப்பர் குயிங் புதிய பேனைகளைப் புத்துணர்ச்சயுடனும், பழைய பேனைகளை புதிய பேனைகளைப் போல மீண்டும் எழுதவும் உதவுகின்றது.

இது ஒரு பாக்கர் பேனா கம்பனியின் உற்பத்தி

உலகினரால் அதிகமாக நாடும் பேனைகளைத் தயாரிக்கும் ஸ்தாபனத்தினா.


## சைவ இளைஞர் மாமன்றக் கோரிக்கை

யாழ்ப்பாணம், திங்கள்

"ஒவ்வொரு மாதத்து இறுதி ஞாயிற்றுக்கிழமைக்கும் ஒன்றுகப் பன்னிருதிருமுறைகளைப் பற்றிப் பன்னிரண்டு ஆராய்ச்சிப் பேருரைகளை வருடந்தோறும் நிகழ்த்துவிக்கவேண்டும்" என வட மாநிலச் சைவ இளைஞர் மாமன்றத்தின் செயற்குழு தீர்மானித்துள்ளது.

பல்கலைக் கழகப் புகுமுக வகுப்பிற்கு புத்தசமயம் ஒரு பாடமாக அனுமதிக்கப்பட்டது போலச் சைவ சமயமும் ஒரு பாடமாக அனுமதிக்கப்பட வேண்டும் என நாட்டிலுள்ள சைவ சமய ஸ்தாபனங்கள் கோரவேண்டுமெனக் கோரும் தீர்மானம் ஒன்றும் இம்மன்றத்தின் செயற்குழுவில் நிறைவேற்றப்பட்டது.

## நெசவுத்தொழில் பயிற்சி

யாழ்ப்பாணம், ஞாயிறு

அராலி இந்துக் கல்லூரியில் நெசவுத் தொழிற் கல்வி பயின்ற நான்கு மாணவர்கள் வெள்ளவத்தை நெசவாலைக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். ஜி. ஸி. ஈ. பரீட்சையில் நெசவை ஒரு பாடமாக எடுத்து விசேட சித்தியடைந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.


REGAL — JAFFNA
NOW SHOWING
Daily 3Shows. Sats.&Suns. Four
NEFERTITE
QUEEN OF THE NILE
(Suqercinescoqe-
(Eastman Colour)



வரி விளம்பரம்

விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள, புதிய குஞ்சு பொரிக்கும் இயந்திரம் (Incubator) ஒன்று, மண்ணெண்ணெயில் இயங்குவதும், ஒரு முறையில் 200 முட்டைகள் பொரிக்கக் கூடியதும், விற்பனைக்கு உண்டு. கீழ்க்காணும் விலாசத்துக்கு தொடர்பு கொள்ளவும். S. சோமசுந்தரம், வியாபாரம், கருணை தெற்கு, (குஞ்சர்கடையடி) கரவெட்டி. 295

கபிரியேல் தயாரிப்புகள்

1. கபிரியேல் பெயின் ஓயில் சகல நோவு, வீக்கம்,வாதம் எதையும் குணமாக்கும். இன்னும் மாடுகளுக்கேற்படும் மேற்படி ரோகங்களும் குணமாகும்.

2. கபிரியேல் ஒயின்மென்ற் சகல அவியல், புண், கட்டு எதையும் ஆற்றும் ஒரே புண் களிம்பு.

3. கபிரியேல் ஸ்பெஷல் பாம் தடிமன், தலையிடி, சந்துளி போன்ற எல்லா வேதனைகளையும் தணிக்கவல்லவிசேஷ பாம்.

தயாரிப்பாளர்கள். GABRIELS,Chunnakam. 273

விற்பனைக்கு

இரண்டு இளம் காளை மாடுகளும் பெட்டி வண்டியும் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு 29, சிவன் பண்ணை வீதி,கொட்டடி, யாழ்ப்பாணம். 404

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க



சினிமாஸ் திரைகளில்

அடுத்த திரை விருந்து

எஸ். எஸ். ராஜேந்திரன் — விஜயகுமாரி

மற்றும் பலர் நடித்த

நானும் ஒரு பெண்

தென்னாட்டில் 125 நாட்களுக்கு மேல் ஓடிய உன்னத தமிழ் திரை விருந்து

வெற்றிகரமான 7வது வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

மற்றும் 8 திரைகளில்



எம். ஜி. ராமச்சந்திரன்—பி. சரோஜாதேவி நடித்த

பெரிய இடத்துப் பெண்



"ராதா சைலால்"

புகழ்பெற்ற "ராதா மின்சார மருந்து" தயாரிப்பாளர்களால் பலவருட அனுபவத்தாலும் சிறந்த ஆயுர்வேத மூலிகைகளையும், மருந்துகளையும் கொண்டு தயாரிக்கப்பட்டது.

முகப்பரு, சொறி, சிரங்கு, வேனல்கட்டி, கக்கூஸ்பற்று, சேற்றுப்புண், தீப்பட்ட புண், செருப்பு வெட்டிய புண், கரப்பான் மற்றும் சரும நோய்களுக்கும் சிறந்த மருந்து. உடைகளில் கறை பிடிக்காது. தீங்கற்றது. எங்கும் கிடைக்கும்.

தயாரிப்பாளர்கள்: "ராதா புரடக்ஸ்"

"ராதா படை மருந்து"

சரும ரோகங்களுக்கு சிறந்த மருந்து, சகலவிதமான படைகள், பற்றுக்கள், மேக ஊறல்கள், அரிப்பு, பித்த வெடிப்பு மற்றும் சருமநோய்களுக்கும் நிவாரணம் கொடுக்கும்.

"ராதா படைமருந்து" என்று கேட்டு வாங்குங்கள்.

எங்கும் கிடைக்கும்

தயாரிப்பாளர்கள்:-

"ராதா புரடக்ஸ்"

ஏகவிநியோகஸ்தர்கள்:-

எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி

53, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். 160, செட்டியார் தெரு, கொழும்பு-11.

தொலைபேசி எண்: 541.

# உதவி பொலிஸ் சுப்பிரிண்டன் தற்காலிக வேலைநீக்கம்

## தஹநாயக்கா புகாரை தொடர்ந்து நடவடிக்கை

கொழும்பு, ஞாயிறு

காலி பகுதியைச் சேர்ந்த ஒரு உதவி பொலிஸ் சுபரிண்டன், பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலினால் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்.

தன்னை இந்த அதிகாரி டெலிபோன் மூலம் தூஷித்ததாக டாக்டர் தகநாயகா செய்துகொண்ட புகாரைத் தொடர்ந்து நடைபெற்ற விசாரணையின் பின் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை டாக்டர் தகநாயகா ஐ ஜி. குபிக் புகார் செய்தார். வியாழக்கிழமை தென் பகுதி உதவி இன்ஸ்பெக்டர் ஜெனரல் இது சம்பந்தமாக விசாரணை நடத்தினார். குறித்த டெலிபோன் சம்பாஷணையை ஒட்டுக்கேட்டதாகக் கூறப்படும் பல சாட்சிகள் வாக்குமூலமளித்தனர்.

இதைத் தொடர்ந்து நீண்ட காலம் பொலிஸ் சேவையில் இருந்ததாகக் கூறப்படும் குறித்த உதவி பொலிஸ் சுப்ரிண்டன் நேற்று தற்காலிக வேலை நீக்கம் செஓயப்பட்டார்.

# இலங்கைவரும் இந்திய நிபுணர் கோஸ்வாமி

## மின்சாரஅபிவிருத்தி திட்டத்திற்கு உதவி புரிவார்

கொழும்பு, ஞாயிறு

தேசியத் திட்டபபகுதிக்கு உதவும் பொருட்டு இந்திய நீர்ப்பாசன மின்சாரத் திட்ட நிபுணர் ஒருவரை இலங்கைக்கு அளிக்கவிருக்கிறது.

திரு. ஜே. எம். கோஸ்வாமி என்ற இந்த நிபுணர் ஒரு வருடம் இங்கு தங்கி அரசாங்கத் திட்ட வேலைகளில் உதவி புரிவார்.

திரு. கோஸ்வாமி கடந்த 37 ஆண்டுகளாக இந்தியாவில் அரசாங்க, தனிப்பட்டதுறைகளில் பொறிஞராகக் கடமையாற்றினர். பிரம்மாண்டமான தாமோதர் பள்ளத்தாக்குத் திட்டத்தில் இவர் பிரதம மின்சாரப் பொறிஞராகக் கடமையாற்றினர்.

பல உலக மின்சார மகாநாடுகளில் இவர் இந்தியாவின் பிரதிநிதியாகக் கலந்துகொண்டவராகும்.

# "முஸ்லிம் பாடசாலைகளில் தமிழே போதன மொழி"

## பிரதேச மகாநாடுகளில் பலதரப்பட்ட கருத்துக்கள்

கொழும்பு, ஞாயிறு

நாடுமுழுதும் நடைபெற்ற பிரதேச முஸ்லிம் கல்வி மகாநாடுகள் வெற்றிகரமாக முடிவடைந்திருப்பதாயும், முக்கிய பல முடிவுகள் செய்யப்பட்டிருப்பதாயும் அகில இலங்கை முஸ்லிம் லீக் கல்வி நிர்வாகக் கமிட்டியின் தலைவர் திரு.ஷெபி மரிக்கார் கூறியிருக்கிறார்'

கீழ்க்கண்ட பல்வேறு சிபார்சுகளை வெவ்வேறு பிரதேச சபைகள் செய்திருப்பதாக அறிவிக்கப்பட்டது.

(1) சிங்களத்தை இரண்டாவது கட்டாய மொழியாகக் கொண்டு, நாட்டிலுள்ள சகல முஸ்லிம் பாடசாலைகளிலும் போதனமொழியாகத் தமிழ் தொடர்ந்து நீடிக்க வேண்டும்.

(2) சகல முஸ்லிம் பாடசாலைகளிலும் சிங்களம் போதன மொழியாகவும், தமிழ் இரண்டாவது மொழியாகவும், இருப்பதுடன், சிங்கள மாற்றம் ஒவ்வோராண்டும் ஒவ்வொரு வகுப்பாக அமுலாக வேண்டும்.

(3) வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள சகல முஸ்லிம் பாடசாலைகளிலும் தமிழ் போதன மொழியாகவும், சிங்களம் ஒரு கட்டாய பாடமாகவும் இருப்பதுடன், இதர மாகாணங்களிலும் சிங்களம் போதன மொழியாகவும் தமிழ் கட்டாய பாடமாகவும் இருக்க வேண்டும்.

(4) எல்லா முஸ்லிம் பாடசாலைகளிலும் 3-ம் வகுப்பிலிருந்து ஆங்கிலம் ஒரு மாற்று மொழியாக விளங்க வேண்டும்.

(5) ஒரு தகுதியான கட்டத்தில் அரபு மொழி கட்டாய கூட்டுமொழியாக அமுல் நடத்தப்பட வேண்டும்.

## ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஞர். அவருள்ள முருகனுக்கு இது தெரியாதா? அவனிடம் உண்மையாக முறைப்பாடு செய்தால், அதையும் அவன் உரியகாலத்தில் நிறைவேற்றி வைப்பான் தானே!

* * *

துறந்தார் தந் தூநெறிக்கட் சென்றேனல்லேன் துணைமாலை சூட்ட நான் தூயே னல்லேன்,
பிறந்தேன் நின் திருவருளே பேசினல்லாற் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே, செறிந்தார்
மதிலிலங்கைக் கோமான் தன்னைச் செறுவரைக் கீழடர்த் தருளிச் செய்கையெல்லாம்,
அறிந்தேன் அடியேனை அஞ்சேலென்னாய் ஆவடுதண்டுறை யுறையும் அமரரேறே.

— திருநாவுக்கரசர்.

# தபால் ஊழியர் வேலைநிறுத்தம்

கம்புறுபிட்டியா, ஞாயிறு

அகில இலங்கை தபால், தந்தி ஊழியர் சங்கத்தின் மாத்தறைக்கிளையைச் சேர்ந்த அங்கத்தினர்கள் வேலைநிறுத்தம் செய்திருக்கின்றனர். தபால் பெட்டியில் தாம் சேர்த்த ஒரு கடிதம் சம்பந்தமாக, ஒரு பெண் புகார் செய்துகொண்டதின் மீது ஏற்பட்ட எதிரொலியே இதற்குக் காரணமாம்.

---

## புதிய கூப்பன் விரைவில் விநியோகம்

கொழும்பு, ஞாயிறு

உணவுக் கட்டுப்பாட்டுப் பகுதியினர் ஒரு லட்சம் வீடுகளுக்கு புதிய மதிப்பீட்டுப் பத்திரங்களை வழங்கியுள்ளனர். புதிய 22-ம் இலக்கத் தொடர் கூப்பன் வழங்குவதற்காகவே இம் மதிடபீடு நடைபெறுகிறது.

பாணேர்ஸ் பிளேசில் உள்ள உணவுக் கட்டுப்பாட்டுக் காரியாலயம் கொழும்புப் பகுதி கணக்கெடுப்பைக் கவனிக்கும். தீவின் ஏனைய பகுதிகளை ஏனைய உணவுக்கட்டுப்பாடு நிலையங்கள் கவனிக்கும்.

---

## திட்டமிட்ட வேலைகள் செயல்படாது

கொழும்பு, ஞாயிறு

பொதுமராமத்து இலாகா போதிய நிதியில்லாத காரணத்தினால் தனது வேலைகளை திட்டமிட்டபடி செயல்படுத்த முடியாதிருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போதிருக்கும் நிதிஜூலை மாதம்வரைதான் போதுமானதாக இருக்குமென இலாகாவைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பார்லிமெண்ட் கூட்டத்தொடர் ஒத்திவைக்கப்பட்டுள்ளதால் ஆகஸ்ட் மாதத்துக்கு முன் நிதி பெற்றுக்கொள்ள முடியாமலிருக்கும் என அறியப்படுகிறது.

---

## 2 வருடத்துக்கு பின்பு கைது

கொழும்பு, ஞாயிறு

செவ்வாய்க்கிழமை காலை கோட்டைப் பொலிஸ் நிலையத்துக்கு வெளியே நின்றுகொண்டிருந்த இன்ஸ்பெக்டர் ஏ. எஸ். டி. சில்வா இளைஞன் ஒருவன் வெளியே நின்று நிலயத்தின் வாசலில் மாட்டியுள்ள படங்களைப் பார்வையிடுவதைக் கண்டார். அங்கே மாட்டப்பட்டிருந்த வில்பிரட் ரணதுங்காவின் படத்தைக் கண்டதும் இளைஞனின் முகம் மலர்ந்தது. அவன் தந்த தகவலின் பேரில் ரணதுங்கா பெயிலி வீதியில் வைத்துக் கைதுசெய்யப்பட்டார். இரண்டு வருடமாக இவரைப் பொலிஸார் தேடிவந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

---

## வெஸாக்கில் விமானச்சவாரி

கொழும்பு, ஞாயிறு

வெஸாக் சமயத்தின் போது கொழும்பின் மீது உல்லாச விமானச் சவாரிக்கு ஏர் சிலோன் ஏற்பாடு செய்திருக்கிறது. இதற்கு 10 ரூபாய் கட்டணம் வசூலிக்கப்படும். நுவரேலியா, ஹட்டன், மஸ்கேலியா ஆகிய மலைப்பகுதிகள் மீதும் சிவனொளிபாதம் மீதும் பறப்பதற்கு ரூ. 25 கட்டணம் வசூலிக்கப்படும். 50 நிமிஷம் இந்தச் சவாரி நீடிக்கும். மே 23 முதல் 27-ம் திகதிவரை இது நீடிக்கும்.

---

## பூங்காவன உற்சவம்

யாழ்ப்பாணம், திங்கள்

திருநெல்வேலி ஸ்ரீ நீலாயதாட்சி சமேத காயாரோகண சுவாமி கோவிலின் பூங்காவன உற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்படுகிறது. விசேஷ மேளக் கச்சேரிகளும், சதுர்க் கச்சேரிகளும் இவ் விழாவில் இடம்பெறும்.

---

## டக்ஸிக்காரர் வேலை நிறுத்தம்

சென்னை, மே 10

சென்னையில் இன்று டாக்ஸிக்காரர்களும் ஆட்டோ ரிக்ஷாக்காரர்களும் ஒருநாள் அடையாள வேலைநிறுத்தம் செய்ததால், இரண்டாயிரத்துக்குமதிகமான டாக்ஸிகளும் ஆட்டோ ரிக்ஷாக்களும் ஓடவில்லை. இதனால் சென்னையில் இன்று பொதுமக்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டனர்.

வேலைநிறுத்தம் செய்தவர்கள், இன்றைய தினத்தை தங்களது கோரிக்கை தினமாக அனுஷ்டித்தனர். பொதுமக்களின் வசதிகளுக்காக, நகரின் முக்கிய பகுதிகளில் இன்று பல பஸ்கள் சேவையில் ஈடுபட்டன.

# கூட்டரசாங்கம் நிறுவ.....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இக் கூட்டத்தில் டாக்டர் என் எம். பெரேரா சமர்ப்பித்த தீர்மானம் ஒரு வாக்கால் (20—21) தோல்வியடைந்தது. டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா பிரேரித்த தீர்மானமொன்று 17 வாக்குகளால் (29—12) நிறைவேறியது. கூட்டாட்சியில் முதலில் லங்கா சமசமாஜக் கட்சி மட்டுமே சேர்வதென்று டாக்டர் என். எம். பெரேராவின் தீர்மானம் கூறுகிறது. கூட்டரசில் இடதுசாரி ஐக்கியமுன்னணியிலுள்ள மூன்று கட்சிகளும் சேரவேண்டுமென்பது டாக்டர் கொல்வினின் தீர்மானமாகும்.

கூட்டரசாங்கமொன்றை நிறுவுவது சம்பந்தமாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் பேச்சுகள் நடத்த இடதுசாரி ஐக்கிய முன்னணி தீர்மானித்துள்ளது.

# கூட்டு ஆட்சி முயற்சி: இந்தியா அக்கறை

புதுடில்லி, மே 10

**இலங்கையில் கூட்டரசாங்கம் ஒன்றை அமைப்பது பற்றி மேற்கொள்ளப்பட்டு வரும் முயற்சிகள் இந்தியாவிலும் சிரத்தையுடன் கவனிக்கப்பட்டு வருகிறது.**

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தன் ஆட்சிக் காலத்தின் இறுதியில் இடது சாரிகளின் கூட்டுறவை நாடியதற்குக் காரணம், நாட்டின் பொருளாதார அபிவிருத்தியிலும் இதர பல தேசியப் பிரச்னைகளிலும் அது திருப்தியளிக்கக் கூடிய வகையில் செயலாற்றத் தவறியதே என இங்கு கருதப்படுகிறது.

இலங்கை-இந்தியர் பிரச்னை மொழிப்பிரச்னை, பொருளாதார அபிவிருத்தி ஆகிய மூன்று பிரதான பிரச்னைகளிலும் ஸ்ரீமதி பண்டாரநாயககாவின அரசாங்கம் திருப்திகரமான ஒரு தீர்வை ஏற்படுத்த முடியவில்லை என்பதும், இதன் காரணமாகவே இடதுசாரிகளின் ஒத்துழைப்பை அவரது கட்சி பெற முயல்கிறது என்பதும் இங்கு ஏற்பட்டுள்ள பொதுவான கருத்தாகும்.

திரு. பண்டாரநாயக்காவின் ஆட்சிக்குப்பின் "மக்கள் அரசாங்கம்" ஏற்பட்ட போதிலும் மக்களின் பிரச்னைகள் பல தீர்க்கப்படவில்லை என்றும், வேலையில்லாத் திண்டாட்டம் வேலைநிறுத்தம், அத்தியாவசியப் பொருட்களின் பற்றாக்குறையினால் ஏற்பட்டுள்ள விலைவாசி உயர்வு, நாடற்றவர் பிரச்னை மொழிப்பிரச்னை, பொருளாதார அபிவிருத்தி ஆகியவற்றில் அரசாங்கம் எதிர்பார்த்த அளவு வெற்றியுடன் செயலாற்றவில்லையென்றும், இதன் காரணமாகவே கூட்டு அரசாங்க முயற்சி மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் இங்குள்ள விஷயமறிந்த வட்டாரங்கள் கருதுகின்றன.

யாழ்ப்பாணத்தில்

# தமிழ் - முஸ்லிம் ஒற்றுமை

## திறப்பு விழாவில் மேயர் பேச்சு

யாழ்ப்பாணம், திங்கள்

"இந்தக் கல்லூரியை ஆரம்பிப்பதற்கு மூலகாரணமாகவிருந்தவர் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் என்பதை முஸ்லிம் சமுகத்தினர் மறந்துவிடக் கூடாது. தமிழ் பேசும் மக்கள் ஒருபோதும் செய்நன்றி மறவாதவர்கள். முஸ்லிம் மாணவர்களுக்காக திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் செய்த இந்த நல்ல காரியத்தை யாழ்ப்பாண முஸ்லிம் மக்கள் மறக்கமாட்டார்கள். அதேபோல இக் கல்லூரிக்கு வெளி மதில் கட்டுவித்துத்தந்த ஜனாப் யூ. எம். ஐத்துருசையும் முஸ்லிம சமுகத்தினர் மறக்கமாட்டார்கள்."

உஸ்மானியா கல்லூரியில் நடைபெற்ற வரவேற்பு வைபவத்தின்போது, யாழ்ப்பாண மேயர் திரு. ரி. எஸ். துரைராஜா பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் தொடர்ந்து பேசும்போது யாழ்ப்பாணத்தில், தமிழ் முஸ்லிம் ஒற்றுமையைக் கண்டு தென்னிலங்கையிலுள்ளோர்பொருமைப்படுகிறார்கள் எப்படியாவது இவர்களின் ஒற்றுமையைக் குலைக்கவேண்டுமென எண்ணி, அரசாங்கம் சில கருங்காலிகளை உபயோகித்துவருகிறது. காட்டிக்கொடுக்கும் இந்தக் கருங்காலிகளுக்கும், அரசாங்கத்துக்கும் உள்ள தொடர்பை நீக்குவது உங்கள் கையில்தான் இருக்கிறது என்றும் கூறினர்.

நல்லூர் எம். பி, ஈ. எம். வி நாகநாதன், யாழ்ப்பாண மேயர் திரு. ரி. எஸ். துரைராஜா, ஜனாப் யூ. எம். ஐத்ருஸ் ஆகியோரைப பாரட்டிப்பேசினர்.

இவ்வைபவத்திற்கு குவாஸி எம். எம். சுல்தான் தலைமை வகித்தார்.

உஸ்மானியா கல்லூரியின் வெளி மதிற்சுவர் வாசலை யாழ்ப்பாணம் மாநகரசபை முதல்வர் திரு. ரி எஸ். துரைராசா திறந்து வைத்தார்; அதே சமயம் மதிற்சுவரில் பொருத்தப்பட்டிருந்த கல்வெட்டை குவாஸி எம். எம். சுல்தான் திரைநீக்கம் செய்து வைத்தார்.

உஸ்மானியாகல்லூரி வாசல் திறப்புவிழாவும், யாழ்ப்பாண மாநகரசபை முதல்வர் திரு. ரி. எஸ். துரைராசாவிற்கு வரவேற்பு வைபவமும் நேற்று மாலை நடைபெற்றபோது ஏராளமான முஸ்லிம் மக்கள் கலந்துகொண்டார்கள்.

உஸ்மானியா கல்லூரி அதிபர் ஜனாப் எம். எம், யூசுப் மரூதி, தலைமையாசிரியர் ஜனாப் எம், எஸ். எஸ். அப்துல் காதர், அல்ஹாஜி வி. எம். எஸ். அப்துல்காதர், யாழ்ப்பாணம் மாநகரசபை துணை முதல்வர் திரு. ஜே. எஸ். அழகையா திரு. செல்லத்துரை, எம். எம். வி. ஜனாப் நூர்முகம்மது, திரு. பீட்டர் சோமசுந்தரம் ஆகியோரும் பேசினர்கள்.

## கடத்தல் முயற்சி..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திய கரன்ஸி நோட்டுகள் இருக்கக் காணப்பட்டது. இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு சட்டவிரோதமாக இந்திய கரன்ஸி நோட்டுகளைக் கொண்டுசெல்ல முயன்ற அவர் சுங்கப் பகுதியினரால் கைது செய்யப்பட்டு பின்னர் விசாரணை செய்யப்பட்டார். விசாரணையின் பின்னர் அவருக்கு ரூபா 1260 அபராதம் விதிக்கப்பட்டது. அபராதப் பணத்தைச் செலுத்திய பின்னர் அவர் பிரயாணம் செய்ய அனுமதிக்கப்பட்டார். இதன் காரணமாக இலங்கையிலிருந்து இந்தியாவுக்குஇளிறு புறப்பட்ட விமானம் அரைமணி நேரம் தாமதித்துச் சென்றது.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு மே மாதம் 11-ந் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.